

சித்தி வேலனைச் சிந்தனை செய்யின்
நித்திய இன்பம் நீயடைவாயே



K. Venkatamma

உ

முருகன் துணை

# சித்தாண்டித் திருத்தல புராணம்

மட்டுக்களப்பு.

—XXX—

ஆக்கியோன்:

**ஆரையூர் திரு. நல். அளகேசமுதலியார்.**

அவர்கள்

—XXX—


பதிப்பித்தவர்:

**திரு. செ. கிருஷ்ணபிள்ளை**

வைத்தியர் அவர்கள்

**சித்தாண்டிகுடி.**

பதிப்புரிமை ஆக்கியோனுக்கே.



சித்தாண்டி சிறி சித்திரவேலாயுத சுவாமி கோயில்
முன் வாயில் இராஜகோபுரம்

உ

ஓம்

சரவணபவ

என்செயலென்றே யிதயத்திலூறு
　　மிருள்மலத்து
வன்செயல் போக்கி வாய்மையுஞ்
　　சீலமும் வான்பொருளும்
இன்சொலுமீகையும் நேர்மையும் தூய
　　விரும்பொறையும்
உன்பெருங் கருணையு மீந்தருள்
　　சித்தாண்டியுறைபதியே

உ

திருச்சிற்றம்பலம்



''பவளமால் வரையினில வெறிப்பது போற்
பரந்த நீற்றழகு பச்சுடம்பிற்
றிவள மாதுடனின் றாடிய பரமன்
சிறுவனை வனைப் பாரதப் பெரும்போர்
தவளமா மருப்பொன்றொடித் தொருகரத்தில்
றரித்துயர் கிரிப்புறத் தெழுதுங்
கவளமா களிற்றின் றிருமுகம் படைத்த
கடவுளை நினைந்து கைதொழுவாம்.''

—(கடவுள் மாமுனிவர்)

மீன்பாடும் தேன் நாடாம் மட்டுக்களப்பு மதுரகவி

புலவர்மணி

திரு. ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள்

மனமுவந்து உதவிய

# சிறப்புப்பாயிரம்

## எழுசீர் விருத்தம்

உலகமெலாமசுர சம்பத்தொழிந்தினிய தேவசம்பத்
தோங்கியுயிர்த் தொகைகள் வாழ்வில்
கலகமகன்றமைதிகுடி கொண்டகத்தில் ஒளி விளங்க
கருணைவளர்திருக் குறிப்பால்
அலகிலருட் சத்தியொடு தேவசேனுதிபதி
யாகவடிவெடுத்தேயிந்த
நிலவுலகில் வந்த தனல் நிகரில்சமாதானநெறி
மக்கள் நெஞ்சில் நிலேத்தம்மா.

ஆக்கமளித் திடுமிச்சாசத்தியொரு பாலமர
அகிலமெலா மியற்றியன்பால்
பூக்குமெழிலருட் கிரியாசத்தி யொருபாற் பொலிய
புன்மையகவிருளை நீக்கிப்
போக்கியருள் ஞானசத்திகரத்திலங்கச் சித்தாண்டிப்
பொற்பதியிற் கோயில் கொண்டு
நீக்கமறத் தேவசேனுதிபதி வீற்றிருக்கும்
நிலேகண்டார் நிறைவுகண்டார்.

திருவிருந்தகளனியெலாம் செழுஞ்செந்நெற்
பொலிந்துதூற்றும்
தெருவெங்கும் பொன்கொழிக்கும்
வருவிருந்தை மனைகள் தொறும் மாதரெலாம் வரவேற்பார்
வளர்தான தருமஞ் செய்வார்
அருள்பொருந்து தவவிரத மனுட்டிப்பார் சிகண்டியெனும்
அமரமுனிகண்ட தெய்வத்
திருமுருகன் சித்தாண்டித் திருப்பதியைத் தரிசித்தார்
செல்வமொடு சிறப்பின் வாழ்வார்.

இத்தகைய திருப்பதிக்கோர் இனியதமிழ்ப்புராண நூல்
இல்லாத குறையை நோக்கிச்
சித்தனையும் சித்திரவேல் அத்தனை யுந்தானத்தார்
சிந்தனை செய்தேத்தி நிதம்
உத்தமர்தம் உளம்போல் உயர்கோவில் கோபுரமும்
உலகமெலாமொருங்கே காட்டும்
சித்திர சிற்பமுமி ருந்தும் தலவரலாறில்லையென்றே
திருமுன்னர் பணிந்து நின்றார்.

ஆரெவரோ இதைத்தருவார் எனத்தேவத்தானத்தார்
அநுதினமும் சிந்தையிலாழ்ந்தார்
சீருடைய தமிழ்த்தாயின் திருப்புதல்வன்குருபக்தி
சமயபக்தி சிறந்தசீலன்
தேருமியல் தமிழ்த்தொடையின் செம்மைநடைநடம்பயிலும்
நலங்கனிந்த நாவின் செல்வன்
ஆரைநல்லூர் அளகேசமுதலியிவர் சிந்தனைக்கோர்
நல்விருந்தாயினானே.

இனியதமிழ் மொழிவளரச்சிவசமய நெறியிகலங்க
மட்டுநன் னாட்டியற்கையின்பம்
கனியவதன் தமிழ்ப்பண்பும் கவிநடையும் மொழிமரபும்
கவின் பெற்றோங்கப்
புனித மிகுமிந் நாட்டுக்கோயில்களின் வரன்முறைக்கோர்
புகுமுகமாயமைந்துதோன்றப்
புனையுமுயர் சித்தாண்டிப்புராணமிது தமிழ்வளங்கும்
புவனமெலாம் பொலிந்து வாழ்க.

ஒப்பம்: ஏ. பெரியதம்பிப்பிள்ளை.

செந்தமிழும் ஆரியமும் சிறந்துவளர்
யாழ்ப்பாணத்து நவாலியூர் தங்கத்தாத்தா
வென்னும் சோமசுந்தரப் புலவரின் தவப்புதல்வர்
**வித்தியாரெத்தினம் திரு. சோ. நடராசா**
அவர்கள் அன்புகூர்ந் தளித்த

# சிறப்புப்பாயிரம்

சூரைமார்பு தடிந்திடுசுந்தரத்
தோகை வாகனன் சித்திரவேலவன்
சீரை செந்தமிழ்த்தேனனை போதிறற்
செய்யபத்தியிற்றுமந் தொடுத்தனன்
நாரைசந்ததம் காலொன்றை யூன்றியே
நற்றவஞ் செயும் பங்கயப் பொய்கைசூழ்
ஆரையம்பதி நல்லளகேசனை
மைந்தமிழ்ப் புலமை பெறுமண்ணலே.

ஒப்பம்: **சோ. நடராஜன்.**

கொழும்பு.

# அணிந்துரைகள்

செந்நெலும் தெங்கும் சிறந்தோங்கி வளரும்
மட்டுக்களப்பு வித்துவான்

**திரு. ந, நாகலிங்கம் அவர்கள்**
(அதிபர் க/மஹயாவ தமிழ் வித்தியாலயம் கண்டி)

நன்றியுடன் நல்கிய

## அணிந்துரை

ஈழவள நாட்டின் கிழக் கடற்கரையோரமாகவுள்ளது மட்டக்களப்பு பட்டினம். இந்நகரின் வடக்கே பதிமூன்று கல் தொலையிலுள்ளது. சித்தாண்டியென்னுந் தலம். மட்டக்களப்பில் சித்தாண்டியென்ருல் அவ்வூர்ச் சித்திர வேலாயுதசுவாமி கோயிலேயே குறிப்பாக் கருதுவர். கிழக்கு மாகாணத்திலுள்ள முருகன் ஆலயங்களுள் பழமையும் வளமும் புதுமைத் தோற்றமுங் கொண்டது இவ்வாலயம். இவ்வாலயத்திற்கு இற்றைவரையும் ஒரு தலபுராணம் இல்லாமை பெரிதும் குறையாகவிருந்தது. அக்குறையையகற்ற அக்குமாரக் கடவுளே ஆசிரியர் ஒருவரைத் தந்துள்ளாரெனின் மிகையாகாது. முருகப் பெருமானைக் குலதெய்வமாகக் கொண்ட நவவீரர் வழிவந்த செங்குந்த மரபிலுதித்த உயர்திரு. நல். அழகேசமுதலியார் ஆரையம்பதியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சித்தாண்டி முருகன் ஆலயத்திற்கு அண்மையில் தொழில் புரிந்தவர். சித்தாண்டி சிறி சித்திரவேலாயுத சுவாமிமீது பக்தியும் அன்புங் கொண்டவர். இவர் தாமாகவே பல நூல்களைக் கற்றுணர்ந்தவர். ஆலயங்களில் புராணம் படிப்பதும் பயன் சொல்வதும் இவருக்கு இனிய தொண்டு. இயல்பாகவே கவிபாடுந் திறமை கொண்டவரென்பதை இந் நூலைக் கற்போருணர்வர்.

ஏறக்குறைய இருநூற்றி ஐம்பது விருத்தப்பாக்க ளால் சித்தாண்டி தலபுராணம் என்னும் இந்நூலை ஆக்கி யுள்ளார் ஆசிரியர். சங்க இலக்கியங்களில் ஆசிரியருக்குள்ள ஈடுபாடு மேற்கோள்களினுலும் உவமைகளாலும் நன்கு விளங்குகின்றது. பாக்களெல்லாம் ஆற்ருெழுக்காக இடைக் கிடை அந்தாதித் தொடையாக அமைந்துள்ளன. பொருட் டெளிவுள்ள பாடல்கள் பெரும்பான்மையாக விருப்பினும் உய்த்துணரவேண்டியவை சில இடைக்கிடையிருத்தல் கற் ருேர் கருத்தை ஈர்த்தற்குப்போலும்.

சிற்றறிவுடையோரும் கற்றுணரக் கூடிய முறையி லும் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் வகையிலும் ஆசி ரியர் ஏனைய தலபுராண ஆசிரியர்களையும் வென்றுள்ளார்.

இந்நூல் தலபுராணமெனினும் ஒவ்வொரு தமிழ் மகனும் சைவ சமயியும் கற்றுணரவேண்டிய செய்திகள் பலவுள. ஆலய வழிபாடு ஆலய நிருவாகிகளின் தொண்டு ஆலயக் குருக்கள்மார் பணி என்பன பற்றி குருக்கள் கூற் ருக ஆசிரியர் விளக்கியிருக்கிருர். சைவ சித்தாந்தக் கருத் துக்கள் நூலிற் பரவலாகக் காணக்கிடக்கின்றன. இத்த கைய சிறந்த நூலைத் தமிழ் மக்கள் அனைவரும் விரும்பிக் கற்று உய்வடைவோமாக.

ஒப்பம்: ந. நாகலிங்கம்.

செந்தமிழ்மொழியும் சிவநெறிச் சைவமும்
சிறந்திலங்கும் யாழ்ப்பாணத்து
நல்லூர் வடக்கு ஆயுள்வேத வைத்தியரும்
பண்டிதருமான

திரு. ச. இராமச்சந்திரன் (வெள்ளை அண்ணை) அவர்கள்
இதயங் கனிந்து நல்கிய

# வாழ்த்துப்பா

குழகனெனுமாறு முகனடியார்க்கின்பம்
கூட்டுஞ் சித்தாண்டியெனக் கூறயாரும்
பழகிடு நற்பதியதனின் பெருமைதன்னை
பாகியலும் பாக்களிலே பாடித்தந்தான்.
அழகேசமுதலியெனு மறிஞர் கோமான்
அவன் பாடலவனி மிசையலர்ந்து வாழி
வாழ்வுமலி சித்தாண்டிமுருகன் கோயில்
மேதினிமேல் மிக்க நலம்விளங்கவாழி.

ஒப்பம்: ச. இராமச்சந்திரன்

ஓய்வுபெற்ற தலைமையாசிரியரும்,
ஆரையம்பதி சிறி திருநீலகண்ட
விநாயகராலய பரிபாலனசபைத் தலைவரும்,
சைவத் திருமுறை அறிஞருமான

**திரு. ஞா. செல்வநாயகம் அவர்கள்**
அன்பு கூர்ந்து வழங்கிய

# மதிப்புரை

விஞ்ஞானம் வளர்கின்றது மெஞ்ஞானம் குன்றி அஞ்ஞானம் தலையெடுக்கின்றது. அதனால் மனக்கலக்கமும் பயப்பிராந்தியும் தற்போது அனைவரையும் ஆட்டிவைக்கின்றன. இன்றைய உலகில் மனிதன் தன்னைச் சுற்றிலுமுள்ள, அனைத்துக்குமே பயப்பிடுகிறான். கொலை, களவு, வழிப்பறி நிலப்பறி ஆதியாம் வன்செயல்கள் தினமும் அதிகரித்துவரும் இந்தச் சூழ்நிலையில் தெய்வநம்பிக்கையொன்றே பயம் போக்கவல்லதாகும்.

இதனை உளத்திற்கொண்ட சான்றோர் தெய்வவழிபாட்டு நூல்கள் பலவற்றை எமக்கு ஆக்கித்தந்துள்ளனர். அவற்றுள் ஒன்றே சித்தாண்டி சிறி சித்திரவேலாயுத முருகன் மீது பாடப்பட்டுள்ள இத்தல புராணமாகும்.

இது மட்டுக்களப்பு ஆரையம்பதிவாசரும் உப சுப்ரமணியச் சிவமரபாளரும் வரகவியுமான திரு. ந. அழகேச முதலியார் அவர்களால் பாடப்பட்ட இருநூற்றி ஐம்பது விருத்தப்பாடல்கள் கொண்டது. படிப்போருங் கேட்போரும் மெய்மறந்து பரவசமடையும் பாங்குடைய சொல் நயமும் பொருள்நயமும் ஒருங்கமையப் பெற்றது. இப் புராணத்தில் பல அம்சங்கள் ஆணித்தரமானவை. அவை: குருக்கள் ஒழுக்கம் பரிபாலகர் சிறப்பு அன்னதான மகிமை தொண்டர் பெருமை உருவ வழிபாட்டின் உண்மை என்

பனவாகும். திரிசூலச்சிறப்பு சிகண்டி முனிவர் வருகை ஆல யம் அமைந்த வரலாறு, அப்போது நிகழ்ந்த அற்புதங் கள் ஆதி அர்ச்சகர் உலகநாதக் குருக்கள் கோயில் பராபரிப்பு திருவிழா மயில்கட்டு தீர்த்தோற்சவம் என் பன படிக்கப் படிக்கத் தெவிட்டாத தெய்வமணம் வீசுவன. இப்புராணத்தை நம் நாட்டுப் பொக்கிஷமாக மதித்து அனைவரும் படித்து நல்லருள் பெற்று சிவசமய நெறி நின்று ஒழுகுவார்களாக.

ஆக்கியோனின் ஆக்கமும் ஊக்கமும் மென்மேலும் பெருகி இன்னும்பல மெஞ்ஞானப் படைப்புக்களை ஆக்கித் தரத் தக்க நல்லறிவும் பத்திமையும் வளரத் தெய்வத் திருவருள் முன்னிற்பதாக.

ஒப்பம்: **ஞா. செல்வநாயகம்**

ஆரையம்பதி,
மட்டக்களப்பு.

ஆரையம்பதி வாசரும்
அரசினர் வைத்தியராயிருந்து ஓய்வுபெற்றவரும்
இலக்கிய இலக்கணங்களில் வல்லுனரும்
சைவ அநுட்டானங்களிற் சிறந்தவருமான

**புலவர். திரு. சிவ. சோமசுந்தரம் அவர்கள்**
சித்தங்கனிந்து உதவிய

# சிறப்பு வாழ்த்து

**நேரிசையாசிரியப்பா**

கந்தன் முருகன் கதிர்வேலவனின்
சுந்தரக் கதையைச் சொற்றிடப்பனுவற்
பாடல்களைத் தினம் படித்தறிவுற்றுப்
பக்தியிற்றிளைத் தபரவச நிலையொடுஞ்
சித்தாண்டியூரைச் சேர்ந்து பல்லாண்டுகள்
வாணிபஞ்செய்து வருவாய் பெருக்கிய
காரணத்தாலக் காரிய நிறைவொடுங்
குற்றிடுதனியின துண்மைகள் யாவும்
மற்றவர் கூறவர்வாய் வாய்கேட்டும்
அநுபூதிநிலையிலறிந்த நல்லுணர்வுங்
கொண்டாராய்ந்த குறிப்புகளனைத்துங்
கண்டாரேத்துங்கவி களிப் பெய்து
தந்தார் நயம்பெறத்தாரணி யோர்க்கெனச்
சொல்லிய பாவலன் துகடூர் செல்வர்கள்
உறைதரு மாரையம்பதியெனுமூரில்
நிறை நீலகண்டனின் மலனருள் பெறுஞ்
சந்ததி வந்தசற்குண சீலனும்
செங்குந்தர்குலச் செம்மலுமாகிய
அழகேசமுதலி நல்லறிவனவன்புகழ்
விழுமிய தாகுக என்றே
நன்றாய் வாழ்த்தி நயந்தனம் நாமே.

ஒப்பம்: **சிவ. சோமசுந்தரம்**

ஆரையம்பதி,
மட்டக்களப்பு.

சித்தாண்டி சிறி சித்திரவேலாயுத சுவாமி கோயில்
தேவஸ்தான சபைத்தலைவர்

**திரு. ச. சண்முகவன்னிமை அவர்கள்**
பெருந்தன்மையுடன் தந்து உதவிய

# ஆசியுரை.

திரு. ந. அழகேசமுதலி அவர்கள் சைவ சமய ஒழுக்க நெறியில் நிற்பவர். சித்தாண்டி முருகப்பெருமான்மீது மாறாத பக்தி கொண்டவர். இங்கு நடைபெறும் உற்சவ காலங்களிலும் கந்தவிரத நாட்களிலும் புராணம் படிப்பதிலும் பயன் கூறுவதிலும் தவறமாட்டார். இத்தகைய நற்பண்புகளமைந்த உத்தமர் பாடிய சித்தாண்டி தல புராணமென்னும் நூல் இங்கு நிகழ்ந்த பழைய உண்மைச் சரித்திரங்களை விளக்குவனவாகும். திருமுருகப் பெருமானே இவர்பால் கிருபா நோக்கம் கொண்டு இப்பணியைச் செய்வித்தார் எனக் கூறுவது மிகையாகாது. எனவே சித்தாண்டிக் கோயில் தர்மகர்த்தாக்களில் ஒருவரான ச. சண்முகவன்னிமையாகிய நான் இந்நூல் வெளிவருவதை ஏற்றுப் பெரு மகிழ்வோடு வாழ்த்துகிறேன்.

ச. சண்முகவன்னிமை

சித்தாண்டிகுடி.

# பதிப்பாளர் உரை

திரு. ந. அளகேசமுதலியவர்கள் பாடிய சித்தாண்டி திருத்தல புராணம் என்னுங் கவிதைப்படைப்புக்களைப் பார்த்தபோது இப் பதியைப் பற்றி இதுவரை வெளிவராமல் மறைமுகமாயிருந்த பூர்வ சரித்திர உண்மைகளைத் தெளிவாக விளக்கியிருப்பது பற்றி மகிழ்ச்சியடைந்தேன். அதனால் சித்தாண்டி ஊரின் வரலாற்றையும் திருத்தலத்தின் மகிமையையும் நமது வருங்காலச் சந்ததியினர் மட்டுமன்றி சகல இனமக்களும் படித்துப் பயனடையத்தக்கது எனக் கருதி இந்நூலை அடியேன் பதிப்பித்துதவ முன் வந்தேன்.

வணக்கம்.

செ. கிருஷ்ணபிள்ளை

சித்தாண்டிகுடி,
19-10-73.

மட்டக்களப்பு சைவப்புலவர் சங்கத்தலைவர்

**பண்டிதர். திரு. த. கிருஷ்ணைபிள்ளை அவர்கள்**

தந்து உதவிய

# பதினைங்கு சீராசிரிய விருத்தம்

மணிநிறமிடற்றுக் கடவுள் நுதல்விழிச்
　　சோதிச்சரவணப்பூந் தொட்டி
லேறியறுவர் முலைப்பாலருந்தி
　　அருங்குழந்தைக் குறிஞ்சிக்குமரன்
பிணிமுகமேற் கொண்டமரர் துயர்தீர்த்
　　தருள்புரிந்த பெம்மான் முருகன்
சித்தாண்டிச் சித்தன் சிங்காரவேலன்
　　திருப்பாதம் மறவாச் சிந்தையன்
அணிநிகர் ஆரணம் ஆகமாதி அறுசமயச்
　　சாத்திரம் தோத்திரம் தேர்ந்தோன்
பழுதகன்றபல்காப்பியத் தொகையும் பழகுதமிழ்
　　தமிழ்த்தாய்க் காவியம் பகர்ந்தோன்
நணிவளர் முத்தான சித்தாண்டித்தல புராணம்
　　படைத்தான் பரமானந்த வித்தான
அழகனருள் பெறும் அளகேசன் என் நண்பன்
　　தானந்தார் வேண்டச் சிவநெறி தழைக்கவே.

# முன்னுரை

''காரராயுனையல்லாற் கதிகாணேனடியேனே.
ஏராருலகெல்லாந்தரு மெந்தாயுமைமைந்தா
பாரார் தொழும் பொருளேயிசை பண்ணே இருகண்ணே
சீராரையம்பதி மாமுக சிவமே பிரணவமே''

—(சதோதய முனிவர்)

அங்கிங்கெனுதபடி எங்கும் பிரகாசமாய் இறைவன் விளங்கினுலும் அவருக்கு ஆலயம் எடுத்து வழிபடும் மரபு மக்களிடையே தொன்று தொட்டு வளர்ந்து வருகிறது. எனவே இம்மகத்தான பணியில் சைவ நன்மக்களும் இந்திய நாட்டில் மட்டுமன்றி ஈழவள நாட்டிலும் பல சைவாலயங்களை அரும்பெருஞ் சாதனைகள் மூலம் ஆக்கிக் கொண்டு வருவது கண்கூடு அவற்றுள் பல சந்நிதானங்கள் செப்பேடுகள் வழியாகவும் சுவடிகள் மூலமாகவும் கர்ண பரம்பரைக் கதைகள் வாயிலாகவும் சரித்திரத் தொடர்பு பெற்று விளங்குகின்றன. இத்தகைய பெருமையும் புகழும் பெற்ற ஆலயங்களுள் சித்தாண்டி சிறி சித்திரவேலாயுத சுவாமி கோயிலுமொன்ருகும் இது மட்டக்களப்பு பட்டினத்திற்கு வடபால் பதிமூன்று கல்தொலையில் அமைந்துள்ளது. இத் திருப்பதியின் கண் விளங்கும் கண்ணைக் கவரும் வண்ண ஓவியங்கள் தீட்டப்பெற்ற இராஜகோபுர வாயிலையுடைய இவ்வாலயம் இவ்வூரை அணிசெய்கின்றது. இப்பதியின் கண் அடியேன் ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பத்திரெண்டாமாண்டு பதினுறு வயது பிராயந் தொடக்கம் வளர்ந்துவரும் பாக்கியம் கிடைத்தது. அந்நாளிலிருந்தே சிறி சித்திரவேலாயுத சுவாமியை அனுதினமும் வழிபட்டு சிவபக்திப் பாடல்கள் பாடிவந்தேன். அதனுல் அப்பெருமான் அடியேன்பால் கிருபா நோக்கம் கொண்டு அவரைப் பாடும்பணிக்கு ஆளாக்கினுர் போலும் இப்பெருமான் கோயில் கொண்டருளியிருக்கும் திருப்பதிக்கு திருக்கோணேசர் கோவில் திருக்கேதீச்சுரம் முதலிய தலங்களுக்கு இருப்பது போன்று கல்வெட்டுக்கள் சாசனங்கள் கிடைக்கவில்லை எனினும் ஒரு ஓலைச் சுவடி மாத்திரம் இவ்வூர் கனகச் சாமியார் என்னும் ஒரு பெரியாரிடம் இருந்தபோது (1935) ஆயிரத்தொளாயிரத்து முப்பத்தைந்தாம் ஆண்டு அடியேன் பார்வையிடும் சந்தர்ப்பம் கிடைத்தது. அதில் இந்திய நாட்டுச் சிகண்டி முனிவர் என்னும் ஒரு பெரியார் ஈழநாட்டுச் சிவதலங்களைத் தரிசித்துக் கொண்டுவரும் போது கண்டியையாண்ட 2ம்

இராசசிங்கன் என்னும் மன்னனையடைந்து அவனால் நன்கு உபசரிக்கப்பட்டுக்குடை கம்பளிப்போர்வை முதலிய பொருட்கள் சன்மானமாகப் பெற்றுக் கொண்டு ஒற்றையடிப்பாதை மார்க்கமாக காட்டினூடே கடுக நடந்து வரும்போது வழியில் ஆதிக்குடிகளான வேடுவர்கள் இங்கு வசிப்பதைக் கண்டனர். அவர்களில் பெரிய கழுவன் சின்னக் கழுவன் என்பவர்கள் இவரை உபசரித்து வேண்டியது கொடுத்து உதவினர். இதனால் மகிழ்ச்சியடைந்த முனிவர் தமது அந்திய நாட்களை இங்கேயே கழிக்க நோக்கங் கொண்டு வேடுவத் தலைவர்களைப் பார்த்து தன்கையில் வைத்திருக்கும் கரும்பொன்னாற் செய்த வேலாயுதத்தை வைத்து அனுட்டானம் செய்ய ஓர் பன்னசாலை அமைத்துத் தரும்படி வேண்டினார் என்றும் அவர்களும் வேண்டுதலுக்கு இசைந்து அகமகிழ்வோடும் பயபக்தியோடும் (தற்போது ஆலயம் அமைந்திருக்கும் கோயிலுக்குப் பின்புறமாக ஓர் அத்திமரத்தடியில்) ஓர் குடிசை அமைத்துக் கொடுத்தனர் என்றும் சிகண்டி முனிவரும் அதில் நல்லதோர் சுபதினத்தில் குடிபுகுந்து தம்வேற்படையைப் பிரதிஷ்டை செய்து வழிபாடியற்றிப்பல அற்புதங்களைச் செய்து ஈற்றில் இப்பதியிலே சமாதியடைந்தார் என்றும் குறிப்புகள் தென்பட்டன. இதை ஆதாரமாகக்கொண்டும் இவ்வூரில் உள்ள வயது முதிர்ந்த பெரியவர்களிடம் வினவியும் அவர்கள் கூறிய உண்மைத் தகவல்களைக் கொண்டும் இத்தலம் சம்பந்தமான விடயங்களை ஒழுங்கு படுத்தி அக்காலங்களில் பத்திரிகை வாயிலாய் கட்டுரைகள் வெளிப்படுத்தினேன். அச்சரிதத்தைத் தொடர்ந்தே இந் நூலை விருத்தப்பாக்களால் சித்தாண்டி திருத்தல புராணம் என்னும் பெயரோடு யாத்துள்ளேன். இத்திருப்பதியைப் பற்றிய வேறு சரித்திரங்கள் உளதாயின் அன்பர்கள் தந்து உதவுவார்களாயின் நாம் மிகவும் நன்றியோடு ஏற்றுக் கொள்வோம். நாம் இங்கு கண்ட சரித்திரத்திற் குறிப்பிட்ட பெரிய கழுவன் சின்னக் கழுவன் என்னும் வேடுவத் தலைவர்கள் வசித்த இடத்துக்கு இன்னும் கழுவன் பள்ளம் என்னும் பெயர் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. இக் கழுவர்கள் பிற்காலத்தில் கடற்கரையை அடுத்துக் குடியேறி வாழ்ந்தபடியால் அந்த இடத்துக்குக் கழுவன்கேணி யென்னும் பெயர் வழங்குகின்றதையும் காணலாம்.

இந்நூல் எழுதப்புகுமுன் கன்னிப்படைப்பாய் கந்த விரத அம்மானை நூல் ஒன்று எழுதினேன் பின்பு தமிழ்த் தாய்க் காவியம் சிறி திரு நீலகண்ட வினாயகர் அகவல் முதலியனவும் பல தனிப்பாடல்களும் எழுதியுள்ளேன்

இத்தகைய கவிதைகள் படைக்கும் பணியைக் கேள்வியுற்ற யாழ்ப்பாணத்து நவாலியூர் தங்கத்தாத்தாவென்னும் சோமசுந்தரப் புலவர் அவர்களின் தவப்புதல்வரும் வித்தியாரெத்தினமுமாகிய திரு சோ. நடராசா அவர்கள் ஒரு நாள் அடியேன் இல்லம் வந்து நீங்கள் கவிதைகள் படைக்கிறீர்களாம் என அறிந்து இங்கு வந்தேன். எடுங்கள் பார்க்கலாம் என்றார் பல காலம் பெட்டியுள் அடைபட்டிருந்த கவிதைத் தொகுப்பு பிரதிகளைக் கொடுத்தேன் படித்து இன்புற்ற அப்பெரியார். என்னைப் பார்த்து பாட்டுகளில் சொல்நயம் பொருள்நயம் முதலிய நயங்கள் நிறைந்திருக்கின்றன. ஆகவே பிரசித்திபெற்ற சைவாலயங்களைப் பற்றித் தனித்தனியே சரித்திரங்கள் புராண வடிவில் வெளிவந்து கொண்டிருக்கும் இக்காலத்தில் மகத்துவம் மிக்க சித்தாண்டிப்பதியில் உங்களுக்கு நெருங்கிய ஈடுபாடுள்ளதால் அத்தல வரலாற்றைப்பற்றிப் பாடுங்கள் என்றார். அடியேன் அவ்வறிஞர் கட்டளையை மேற்கொண்டு சித்திரவேற் பெருமான் திருவருளை முன்னிட்டுப் பாட்டுக்கள் எழுதத் தொடங்கினேன் எழுதிக்கொண்டு இருக்கும்போது அண்மையில் சிவபதமடைந்த எனது அண்ணர் முறையினரும் கவிராஜகேசரியும் பண்டிதருமான திரு. ஆ. சபாபதி அவர்களிடம் கொண்டுபோய்க் காட்டினேன் அவர்களும் கேட்டு இன்புற்று அருமையான பாடல்கள் தம்பி! இன்னும் எழுதிக்கொண்டு இரு உன் கவிதைப்பணி வளரட்டும் என வாழ்த்தினர் நானும் விடைபெற்று மீண்டு வந்து இடையறுது அல்லும் பகலுமாய் எழுதி இருநூற்றி ஐம்பது பாட்டு வரையில் முடித்தேன் பின்பு கற்றுவல்ல அறிஞரின் பார்வைக்குக் கொடுக்கவேண்டுமெனக் கருதி எனது சகோதரரும் மதுரைத் தமிழ் சங்கப் பண்டிதருமான திரு. க. சந்திரசேகரி நொத்தாசியார் அவர்களிடமும் எனது மைத்துனரும் தலைமையாசிரியருமாகிய திரு. சிவ. விவேகாநந்த முதலியார் அவர்களிடமும் கொடுத்தேன் அவர்களிருவரும் தனித்தனியே பார்வையிட்டுத் திருத்தங்கள் செய்து உதவினர். ஆதலின் அந்த அறிவுப் பெருந்தகையாளர்களுக்கு என்றுங் கடமைப்பாடுடையேன்.

கையெழுத்துப் பிரதியான இந்நூல் பல மாதங்கள் சிறையிருந்தது எனினும் இதை அச்சிட்டு வெளிபடுத்த வேண்டுமென்னுமெண்ணம் அநவரதமும் என்னிதயத்தைத் தூண்டிக்கொண்டிருந்தது இது பற்றி ஒருநாள் என் உடன் பிறந்த சகோதரரைப் போல பழகிவருபவரும் சித்தாண்டியூரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் அன்பு அமைதி அடக்கம் உடையவருமான திரு. செ. கிருஷ்ணபிள்ளை

வைத்தியர் அவர்களிடம் தெரிவித்தேன். கையெழுத்துப் பிரதியைத் தரும்படி கேட்டார். அடுத்தநாள் கொண்டு போய் கொடுத்தேன். புராணத்தைப் படித்துப்பார்த்து விட்டு முகமலர்ச்சியோடு என்னை நோக்கி அண்ணு! இப் புராணத்தில் யாவரும் படித்துப் பயனடையக் கூடிய அரிய விஷயங்கள் பலவுள. சித்தாண்டியூர் மக்களாகிய நாங் களே இந்நூலை அட்சிட்டு வெளிப்படுத்தும் பணியைச் செய் யக் கடமைப்பட்டவர்கள். ஆதலின் சிறி சித்திரவேலாயுத சுவாமி கோவில் வீதியில் ஒரு பொதுக்கூட்டம் கூட்டி ஊர் மக்களுக்கு இந்நூலை வாசித்து விளக்குவோம் அதன் பின் ஆறுமுகப் பெருமான் அருளால் நமது நூல் அச்சேறி வெளி வருவதற்கு ஊர்ப் பொதுமக்களின் சார்பில் நானே அப் பணியைச் செய்து முடித்துத் தருகிறேன் என்று கூறிஞர் அவ்வினிய மொழியைக் கேட்டதும் என் அகம் குளிர்ந்து முகம் மலர்ந்தது பின்புநான் அவரை நோக்கி தம்பி, சைவத்துக்கும் தமிழுக்கும் அரும்பணியாற்றித் தம் வாழ்க் கையைத் தியாகம் செய்த பெரியோர்கள் பலர் இறந்தும் இறவாப்புகழடைந்து விளங்குகின்றனர். தம் வாழ்க்கைக் குப் போராடிக்கொண்டிருக்கும் இக்காலத்தில் இத்தகைய உத்தமர்களைக் காண்பது மிகவரிது. எனவே இக் கைங்கரி யத்தைச் செய்து முடிக்கும்படி முருகப்பெருமானே தங் கள் பால் கிருபா நோக்கம் கொண்டு ஏவிஞர் போலும் இதனுல் வாழ்வின் பேற்றைப்பெற்று பிறந்தகத்தின் சரித் திரப் புகழை ஓங்கச் செய்ய முன்வந்தீர்கள் தங்கள் பணி மேலும் வளரட்டும் என வாழ்த்திவிட்டு மீண்டேன் பின்னர் இவரது அயரா முயற்சியாலும் எனது அன்புக்குரிய நண் பர்கள் உதவியாலும் 9-9-73 பி. ப. ஞாயிற்றுக்கிழமை கோவில் முன் வீதி மேடையில் கோயில் தர்மகர்த்தாவில் ஒருவராகிய திரு. பி. முத்துப்பிள்ளை அவர்கள் தலைமை யில் புராணம் படிக்கப்பட்டது பல நண்பர்கள் புகழ்ந்து பாராட்டிஞர்கள் அவர்களில்

திரு. பி. சிவலிங்கம் ஆசிரியர் அவர்கள்.
திரு. ப. மயில்வாகனம் அவர்கள்.
திரு. இ. பூபாலபிள்ளை அவர்கள்.
திரு. சீ. கணபதிப்பிள்ளை ஆசிரியர் அவர்கள்.
திரு. பி. முத்துப்பிள்ளை ஆசிரியர் அவர்கள்.

குறிப்பிடத்தக்கவர்கள் இந் நண்பர்களைப் பாராட்டுவது நமது கடமையிலொன்ருகும்.

மேலும் அகதிபரதேசிகளுக்கு கோயிலில் பூசை முடிந்தபின் அமுதுக்கட்டிகள் வழங்கப்படல் வேண்டும் என் னும் அக்காலக் கட்டளையை மேற்கொண்டு கடைபிடித்து

கோயில்களிலும் மடங்களிலும் மாத்திரமன்றி வீடுகள் தோறும் வந்தவர்களுக்கு அமுது படைப்பதில் சித்தாண்டி குடிமக்கள் தலை சிறந்தவர்கள் அந்த பரம்பரையில் வந்த திரு. செ. கிருஷ்ணபிள்ளை அவர்கள் இப்பணியைச் செய்ய முன்வந்ததில் வியப்பில்லை எனலாம். ஆகவே இப்பெருமக ஞர் இதுபோன்ற இன்னும்பல பொதுப்பணிகளுக்கு உதவி செய்து எல்லா நலன்களும் பெற்று இனிது வாழ வேலா யுதப் பெருமானை வாழ்த்தி வணங்குவோமாக. இந்நூல் வெளிவர வேண்டுமென்னும் நோக்கத்தோடு கூட்டத்திற் பங்குகொண்ட சித்தாண்டி வாணிகலா மன்றத்தினருக்கும், கிராம முன்னேற்றச் சங்கம், சனசமூக நிலையம் ஆதியவற் றைச் சேர்ந்த வாலிபச் சகோதரர்களுக்கும் எனது நன்றி.

இந் நூலைப் பார்வையிட்டுப் புகழ்ந்து மெச்சி வாழ்த் துப்பா மதிப்புரை கருத்துரை ஆசியுரை சிறப்புப் பாயிரம் முதலியனவற்றை அன்பு கனிந்த உளத்தோடு எழுதியுத விய அறிவுடைப் பெரியோர்களான பண்டிதர் திரு. ச. இராமச்சந்திரனர் அவர்களுக்கும். வித்துவான் திரு. ந. நாகலிங்கம் அவர்களுக்கும் சிறி சித்திர வேலாயுத சுவாமி கோயில் தர்மகர்த்தாக்களில் ஒருவரான ச. சண்முகவன் னிமை அவர்களுக்கும் ஓய்வுபெற்ற டாக்டர். திரு. சிவ. சோமசுந்தரனர் அவர்களுக்கும் ஓய்வு பெற்ற தலைமை யாசிரியரும் சிறி திரு நீலகண்ட விநாயகர் ஆலய பிரிபாலன சபைத் தலைவருமான திரு. ஞா. செல்வநாயகம் அவர் களுக்கும் நவாலியூர் வித்தியாரெத்தினம் திரு. சோ. நட ராசா அவர்களுக்கும் அறிவுக்கடல் புலவர்மணி. ஏ. பெரிய தம்பிப்பிள்ளை (எனது குருநாதர்) அவர்களுக்கும் என் னிதயம் கனிந்த நன்றி.

இந்நூல் அச்சிட்டுக் கொண்டிருக்கும் போது எனது அருமையான நண்பரும் மட்டக்களப்பு சைவப்புலவர் சங் கத் தலைவரும் பண்டிதருமான திரு. ந. கிருஷ்ணபிள்ளை அவர்கள் மனமுவந்து அறிமுக ஆசியுரை வழங்கினர் அவர் களுக்கும் எனது மனமார்ந்த நன்றி.

மேலும் மட்டக்களப்பில் மாபெரும் ஸ்தாபனங் களில் ஒன்ருன கத்தோலிக்க அச்சகத்தினர் அன்போடு கையேற்று மிகவழகாகவும் பொலிவுறும் தோற்றமாகவும் குறுகிய கால எல்லைக்குள் நூலை அச்சிட்டு வெளியிட உதவி னர் ஆதலின் அவர்களுக்கும் எனது நன்றி உரியதாகுக.

வணக்கம்

ஆரையம்பதி, ந. அளகேசமுதலி
19-10-73.

சித்தாண்டித் திருப்பதியில்
அன்பும் பண்பும் சிறந்த குடியில் வாழ்ந்து
என்னையும் இளமைதொட்டு அன்புடன் பேணிக்காத்து
யாவர்க்கும் அன்னையாய் விளங்கி
அன்னதானப் பணிபுரிந்து
அரனடி சேர்ந்த

**திருமதி. நாகலிங்கம் தில்லையம்மா**
அவர்களுக்கு

இந்நூல்

# சமர்ப்பணம்

இல்லையே யென்று சோர்ந்து
இரும்பசியுறுவார் மாட்டு
எல்லையில்பரிவு கூர்ந்து
இனிய நல்லமுதமீந்தே
மெல்லியர் குலவிளக்காய்
விளங்கிவிண்ணுடு சேர்ந்த
தில்லையாமம்மையாரின்
திருவடிக்கின் நூல்வைப்பாம்.

உ

திருச்சிற்றம்பலம்

# பாயிரவியல்

### விநாயகர் வணக்கம்

சித்திவேலன் திருக்குமரன் கதை
பத்தியோடு பணிந்து புகன்றிட
சித்தி புத்திகள் சேர்மணவாளனும்
அத்திமாமுகனத்தனை ஏத்துவாம்.

### சிவபிரான் வணக்கம்

அம்மைபாக மமர்ந்தினி தைந்தொழில்
செம்மையோங்கிடச் செய்து மகிழ்ந்திடும்
எம்மையாளுடை எந்தை சிவன்பதம்
கைம்மலர் கொடுகாதைபுனைகுவாம்.

### குமரக் கடவுள் வணக்கம்

அமரர் தங்களருஞ்சிறை மீட்டிடக்
குமரனாகிக் கொடியவவுணரை
அமரில் வென்றோரறுருவான நம்
அமல நாயகற் கஞ்சலி செய்குவாம்

### உமாதேவியார் வணக்கம்

வேறு

உலகுயிரனைத்தும் வாழ
ஒளி பெறு சத்தியாகிப்
பல பல வடிவமாகிப்
பணிந்துளோர்க் குருவமாகி
அல கிலாக்கருணைத் தீம்பால்
அன்புடன் சுரக்குமன்னை
மலரடி சூடியாமும்
மங்கலம் பெற்று வாழ்வாம்.

### விஷ்ணு மூர்த்தி வணக்கம்

ஐந்திரு சென்னியானை
அடுசமர் தனிலே கொன்றும்
குந்தியின்மைந்தர்க் காளாய்க்
கோரிய பகைமுடித்தும்
இந்த நற்புவியி னூடே
யியங்கிடு சீவர்க்காக்கும்
சுந்தரக் கண்ணனார்க்குத்
தூமலர் சாத்தி வாழ்வாம்.

### கலைவாணி வணக்கம்

புன்கருங் காக்கை போய்த்தான்
பொருப்பக மிமையஞ் சார்ந்து
தன்மயம் நீங்கிச் சீர்பொன்
தன்மையை யடைதலேபோல்
மன்னிய வறிஞர் முன்னே
மாசறக் கற்றிடாத
என்னையுங் கவிஞனாக
இயக்கிடு வாணி போற்றி.

கலை தனையாய்ந்து கண்டு
கவிமழை பொழியும் நல்ல
புலவரினி தயந்தன்னிற்
புகுந்துளம் மகிழ்ந்து நித்தம்
அலகிலாக் கருணை தன்னால்
அருந் தமிழன்னைக்காகத்
தலைதனைப் பொருந்தச் செய்த
தாய் திருத்தாள்கள் போற்றி

### வீரவாகு தேவர் வணக்கம்

வேறு

சூரர்தானை தொலைத்திடவெண்ணியே
தீரவேலைத் திருக்குமரர்க் கருள்
பூரணிபதம் பூத்த சிலம்புதி
வீரவாகு விரைகழல் போற்றுவாம்.

## குரு வணக்கம்

வேறு

உலகுதனில் விளங்கு மொழியாவினுள்ளும்
உயர்வான தமிழதனை யாய்ந்து தேறி
குலவு நலகுலமெல்லாம்சம மாயெண்ணிக்
குண நலத்தாற் கீதையின் வெண்பாவினோடு
நிலவுபல நூல் படைத்தே மக்களுள்ளம்
நீங்காத சால்பு நலம் நிறைந்தவாசான்
புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை தம்மைப்
புந்தியிலே நினைந்து நிதம்போற்றுகின்றேன.

## அவை யடக்கம்

சிற்றறிவுடையேன் சொல்லும்
செய்யுளிற் குறைகளுண்டேல்
கற்றறிவுடையோர் நோக்கிக்
கந்தவேள் கதையென்றுன்னி
மற்றிதையிகழ்ந்திடாது
மருவிடு முளத்திலன்பாய்ப்
பெற்றிடு மதலை செய்யும்
பிழையென மன்னிப்பாரே.

## பணித்தோர் சிறப்பு

எங்குதம் மிசைபரப்பும்
ஈழமா மணி நாடென்னும்
மங்கையாள் மணக்கப் பாவின்
மலர்த்தொடை சாத்தி நின்ற
தங்க மாந்தாத்தாவுக்குத்
தகவுடைப்புதல் வரான
துங்கமார் நடராசண்ணல்
சொல்பணி மேற்கொண்டேனல்.

## நூற்பயன்

சித்தி யூரொளிரும் வேலன்
திருத்தல புராணந்தன்னைப்
பத்தியாய்ப்படிப்போர் கேட்போர்
பல்வளஞ் சுரந்து மேலாஞ்

சித்தமும் தெளிந்தெஞ்ஞான்றும்
சிறந்த சீர்ஞானம் மல்கி
முத்தியிற் கலந்துதூய
முதல்வனை யடைவர் தாமே.

## வாழ்த்து

கல்வி யாவுங் கசடற வோங்குக.
செல்வமெங்குஞ் செழித்து வளருக.
நல்லமாரி நனியுறப் பெய்துசீர்
மல்கி மாண்புயர் மாநிலம் வாழ்கவே.

## சித்தாண்டிப்பதியின் இயற்கைவளச் சிறப்பு.

நத்தி வந்தவருக்கெல்லாம்
நல்விருந் தோம்பி நிற்கும்
நித்திலத்துவீப நாமம்
நிலைத்திடு மீழத்தாயின்
சித்தி சாலிதயமென்னத்
திகழ்ந்திடு குணபால் ஞானப்
பக்தர்கள் பரவும் மட்டுக்
களப்பெனும் பண்பு நாடே.

மட்டுமா நகரினுக்கோர்
மணியெனத் திகழு நல்லூர்
இட்டமாய் முனிவர்கூடி
இருந்தவம் செய்த மூதூர்
வட்டமாய் வளைந்தே யோங்கும்
வரைகளு முள்ள தொன்னூர்
நெட்டுருவான நீர்வாய்
நிரம்பிடுமூரின் சாரல்

கூவிடுங் குயிகளீட்டம்
குஞ்சரக்களிற்றின் நாட்டம்
தாவிடுங் குரங்கி னோட்டம்
தகரெனு மாட்டி னூட்டம்
கோவினஞ்சூழுங் கோட்டம்
குலவிடுமான்கள் கூட்டம்
சேவலும் மயிலுந் தோட்டஞ்
சிறந்த சித்தாண்டியூரே.

செந்நெலின் கழனி சூழத்
தெங்குடன் கமுகும் மல்கும்
புன்னையுந் திகழும் நல்ல
பூம்பொழிலருவி பாயும்
மன்னிய பதிகள் தோறும்
மாபலாக் கனிகள் தூவும்
பொன் நகரனை யநாடாய்ப்
பொருந்து சித்தாண்டியூரே.

வினைதனைப் போக்குமேலாம்
வெண்ணீறு திகழு மாழச்
சுனைகளும் வயங்கி நிற்கும்
சுந்தரக் கயல்கள் துள்ளும்
கனைகடலயலிற்சூழும்
கவினுறு சங்குநல்கும்
இனைய பல்வளங்களோடே
இலங்கு சித்தாண்டியூரே.

## தொழில், கலை வளச் சிறப்பு

சட்டக்கலையில் வல்லுனரும்
சமயப்பணிகள் புரியுனரும்
பட்டக்கல்வி தேர்ந்தவரும்
பல நோய் போக்கும் மருத்துவரும்
வட்டைபுரக்கும் விதானையரும்
வளர்க்குங்கல்வி உபாத்தியரும்
கட்டுங் கணிதச் சோதிடரும்
கலந்து விளங் குந்திருவூரே.

சீரணியுள்ளு ராட்சித்
திணைக்களத்தலைவர் சார்ந்த
ஊரதி காரிசங்க
உறுப்பினருடையா ரானோர்
ஏரணியுழவின் மிக்கிங்
கிலங்கு காராளராலே
தாரணி தாங்கி க்காக்கும்
தனம் மிளிர் செல்வவூரே.

காய்கறிக் கடைகளோர்பால்
கதிர்மணிச்சாலி யோர்பால்
பாய்விலை விற்பரோர்பால்
பட்சணக்கடைக ளோர்பால்
நோய் தவிர மிர்த மோர்பால்
நுங்கிள நீரு மோர்பால்
தாய்க்குலம் பிட்டு விற்கும்
தகைமையுமொரு பாலன்றே.

மழுவொடு மானுமேந்தும்
மாதவன்றன்னை யேத்தித்
தொழுதிடுமடிய ரோர்பால்
தோத்திர மிசைப்பரோர்பால்
உழுதிடு முரவரோர்பால்
உயர் கதிரறுப்பரோர்பால்
எழுதிடு வினைஞர் ஓர்பால்
இசை படவிளங்கு மிவ்வூர்.

பொன்நகை வணிகரோர்பால் பொன்வினைசெய்வரோர்பால்
பண்ணிடு களியால் நல்லபாத்திரம் வனைவரோர்பால்
கண்ணினைப்பறித்து நிற்கும் கட்டிடக்கலைஞ ரோர்பால்
எண்ணிலாத்தொழில்களாற்றி இசையினின்றிலங்கு மிவ்வூர்

தயிரினை நிறைப்பரோர் பால்
தருக்கனி விற்பரோர்பால்
மயிர் வினை செய்வரோர் பால்
மாலை கள்புனைவ ரோர்பால்
துகிலினை வெளுப்பரோர் பால்
தூயபால் விற்பரோர்பால்
பயிர்வினை விப்பர் ஓர்பால்
பாங்குடன் விளங்கு மிவ்வூர்.

வாசிகசாலை சங்கம்
மருவிடு கிராமச் சங்கம்
தேசிகத் தொண்டர் சங்கம்
திகழுழ வோர்கள் சங்கம்
நேசர் முன்னேற்ற சங்கம்
நிலவு பல் நோக்கசங்கம்
மாசிலா வினைஞர்சூழ
மாண்புற விளங்கு மிவ்வூர்.

## திருத்தலச் சிறப்பு

நம்புவாருய்ந்து வாழ
நாடி நன்மலர்கள் சூடி
நம்பியே பரவிப்போற்றும்
நாயகி மாரி கோட்டம்
அம்பலக் கணேசன் கோட்டம்
ஐய ஞர் குமரன் கோட்டம்
உம்பர் கோனணங்கு கோட்டம்
ஒள்ளொளி வள்ளி கோட்டம்

கற்றவரிதயந் தன்னிற்
களிநடம் புரிந்து நிற்கும்
கற்பக மணிமாணிக்கக்
கணேசஞருறையுங் கோட்டம்
நற்றவ விபுலானந்த
நாயஞர் சிலையின் தோற்றம்
இத்தலம் யாவு ஞ்சூழ்ந்த
எழிலுறு பதியீதம்மா.

## சிகண்டி முனிவர் வருகையியல்

சிகண்டி முனிவர்
வருகை.

பன்னகம் பூண்டிலங்கும்
பரமஞர் கருணை யுன்னித்
தென்னகமிருந்தே ஈழத்
திருத்தலங் கண்டிறைஞ்சி
மன்னனை யணுகியன்பால்
மதிக்க வெண்குடையும் பெற்று
இந்நகர் வந்துறைந்த
இருடியின் சரிதைசொல்வாம்.

முந்தொரு ஞான்றுதன்னில்
முருகவேள் வதுவை வேட்ட
செந்திரு வள்ளியம்மை
சீர் கெழுமரபா ரென்று
வந்திடு குடிகளிங்கு
வள மொடு வாழுநாளிற்
கந்தவேல் கையிற்றுங்கிக்
களிப்பொடு முனிவன் வந்தான்.

### பெரிய கழுவன் சின்னக் கழுவன் என்னும் வேடுவச் சகோதரர்கள் முனிவரை உபசரித்தல்

வந் தநல்லிருடி பாதம்
மண்ணுற வணங்கி யேத்தி
வெந்துறு பசியைத் தீர்த்து
வேண்டிய தளித்தகாலை
அந்த நற்றவத்தனன்னுள்
அவர்களிலன்பு கூர்ந்து
சிந்தையினிறைந்தவற்றைச்
சீருடனி சைக்கலானன்.

நண்பர்காள் நீவி ரென்றும்
நயந்து ளோர்க்குதவிவாழும்
பண்பு களதனைக்கண்ட
பான்மையாலீங்கு வைகி
கண்டிகழ் மணிபோ லென்றன்
கந்தவேற் படையை வைத்தே
விண்டிகழ் பூசையாற்ற
வியத்தகு குடிசை செய்வீர்.

### வேடுவர்கள் அத்திமரமொன்றின் கீழ் குடிசையமைத்துக் கொடுத்தல்


என்னலும் முறுவல்பூத்தே
யிதுபெரும் பேறென்றெண்ணி
அன்னவர் அத்தியின் கீழ்
அழகிய குடிசையாத்துத்
தன்னிணை யில்லாதந்தத்
தவமுனியிருக்கை நண்ணி
உன்னிய கருமம் யாவு
மொல்லையில் முடித்தோமென்றார்.

### அடியார்கள் அமைத்த குடிசையில் முனிவர் வேலாயுதத்தைப் பிரதிஷ்டைசெய்து பூசை புரிதல்

முனிவனு மிதனைக்கேளா
முருகனி னருளே யென்று
நனி பெரு வேட்கை யெய்தி
நண்ணிய வன்பர்க்கெல்லாம்

பாலுண்டு பசி தீர்க்க

வேலுண்டு வினை தீர்க்க.



சேவலும் மயிலும் போற்றி

திருக்கைவேல் போற்றி போற்றி

கனிவுறு மொழி மலர்ந்து
கையில் வேலதனைத் தாங்கி
இனிவுறச் செய்த வில்லம்
இருடி போய்ப் புகுதலானான்.

புகுந்துள முனியுமாங்கு
பொறிகளை நெறிப்படுத்தி
மிகுந்துள பக்தியோடு
வேற்படை தனையிருத்தி
உகந்த நற்கிரியை செய்தே
யோமெனு முயிரு மூட்டித்
தகுந்த நூலறிவு கூறித்
தலத்தினிற் பூசை செய்தான்.

## முனிவர் திருவெண்ணீற்றினால் அடியார்களுக்குத் தீவினைகளை நீக்கிப் பலசித்துக்களைச் செய்தல்

பூசனைபுரியு மந்நாள்
பூதலம் பரவிப்போற்றும்
ஈசனார் நீறு கொண்டே
ஏற்று மந்திரத்தாலன்பின்
நேசர்கள் எண்ணம் யாவும்
நிறைவுறச் சித்தியாக்கிப்
போசன நியதியின்றிப்
பொழுதெலாம் நிட்டையானான்.

## முனிவர் நிட்டையிலிருந்த தோற்றம்

நிட்டையிலிருந்த காலை
நியமமாய் நீறுபூசிப்
பட்டுடைக் காவிதாங்கிப்
பாங்கராம் சிட்டர்கூடி
மட்டிலா நமச்சிவாய
மந்திரம் செபித்தபோது
அட்டதிக்குள்ள மாந்தர்
அங்குவந்தினைய சொல்வார்.

மாந்தளிரனைய மேனி
வயமியல் அருட்கண்பார்வை
சாந்தமே கனிந்த தோற்றம்
சார்ந்தவர்க்குதவு கைகள்
காந்தமே நிகர்த்திலங்கும்
கவினுறுவதனம் மேலாம்
மாந்தர்கள் மருங்குசூழ்ந்து
மலரடி பணிவராலே.

பாரினர் தாமோ தூயப்
பாற்கடற்றுயின்று வைகும்
நாரணர் தாமோ பண்டு
நஞ்சினையுண்டு காத்த
காரணர் தாமோ வாசக்
கஞ்சமாமலரின் மேவும்
ஆரணர் தாமோவிங்கு
அமர்ந்திடு முனிவரம்மா.

முண்டகநா தனை
மூதொளி யிரவி வந்தே
யெண்டிசைக் கதிர்கான்றீண்டு
இருளினைக் காய்வதேபோல்
பண்டுள மாந்தரிங்கு
படுந்துயரல்லல் கண்டே
யண்டிய முனிவனன்னோர்க்
கறநெறி விளம்பலுற்றார்.

## முனிவர் அடியார்களுக்கு அறநெறி யுணர்த்தல்

அம்புவிமக்காள் தோற்ற
மரிதென வறியீர்நீங்கள்
ஐம்புலன் வழியிற் சென்றே
யல்லலுற்று ழல்கின்றீரால்
நம்பெரு வாழ்விலென்றும்
நன்னெறி யொழுகி மேலாம்
உம்பர் தம்பதத்தைச் சேர்ந்திங்
குய்திடமுயற்சி செய்வீர்.

பதியினிலிலங்கு வேலைப்
பத்தியாய்ப் பணிவீராகில்
மதி நலஞ் சுரந்து மல்கி
மனவளம் சிறந்துபொங்கி
நிதியினூற் கருமமாற்றி
நிறை பெருஞ் செல்வவாழ்வும்
விதி யையுங்கடந்து மேன்மை
விளங்கிடு நெறியே காண்பீர்.

அயர்ந்திடலின்றி வாழ்வி
லனுதின முணர்விளேடு
யுயர்ந்து தன்னிறைவு கண்டே
ஊருணி நிறைந்ததென்ன
நயந்து வந்தடைந்தார் பேணி
நற்பெருங் கலைகளாய்ந்து
பயன்திக முரவோர் நட்புப்
பாங்குடன் பயில்வோர்மாந்தர்

வாய்மையும் பொறுமை நேர்மை
வலிமையு முளத்தில் மிக்க
தூய்மையும் தெளிவும் பண்பும்
துலங்கு தண்ணளியுஞ் சீலம்
ஆய நற் பண்பினேடு
அமைதியாய் விளங்குவாரேல்
தீயனவனைத்தும் தீர்த்த
திருவுடைமக்களாவர்.

திக்கெலாமாய்ந்து நோக்கித்
தீது நன்றி வையறிந்து
பக்குவ மனத்தராகிப்
பண்பெலாம் நிறைய நித்தம்
நக்கனூர் சந்நிதானம்
நயப் புறப் பணிவராகில்
மக்களுள் மக்களென்னும்
மதிப்பினுக் கருகராவார்.

நொந்து நொந்திதயம் புண்போல்
நோயது கொள்வோரெல்லாம்
கந்தனே கடம்பாவென்று
கடிமலர் தூவிப் போற்றி

வந்தனை செய்வாரென்றும்
வாழ்விநிலொளி விளங்கச்
சிந்தையிற்றிகழும் நன்மை
செயலிலும் செறிதல் காண்பார்.

சிறந்திடுமறிவால் மற்றைச்
சீவரைப் பேணி நித்தம்
அறந்தனில் நிற்பார் தூய
அந்தணராவர் மற்றோர்
பிறந்திடுங் குலத்தைமெச்சிப்
பெரிதெனப்பு கலுவாரேல்
துறந்துளோ ரவற்றை வேண்டாத்
தூசென மதிப்பரம்மா.

அறிவரிவ்வுலக வாழ்வு
அநித்திய மென்றுணர்ந்து
நெறிகளை வசப்படுத்தி
நீரிற்றாமரை யேபோலச்
செறிவுறலின்றி வாழ்ந்து
சிறந்திடு மோனமேவி
இறையுறுஞ் சிந்தை சேர்த்தே
யிணையடி பரவி நிற்பார்.

ஆசறு மொழிகள் கூறி
அறநெறியுணர்த்துஞ் ஞானத்
தேசிகன் பாதம் வேண்டித்
தினமுமங் கடையுமக்கள்.
பூசனைக்காக வன்பாய்ப்
பொரியவலரிசி நெய்பால்
வாசனை மலருந்தேனும்
வகைவகை கொண்டு செல்வார்.

**சித்தாண்டிப்பதிக்கு இப்பெயர் வந்த காரணம்**

கொண்டினி தளித்த பண்டம்
குமரவேற் கருத்திப்பின்பு
தொண்டருக் கமுதுசெய்து
துயருறு பசியைப் போக்கி
ஒண்டொடியார்கள் கூடி
உவப்புடன் பணிகளாற்ற
அண்டர் வாழ்பதியே போன்று
அப்பதி விளங்கிற்றம்மா.

நவமணி யிலங்கு வேலன்
நல்லருள் புரிந்துநாளும்
தவமெனும்பயிர் விளைந்து
தன்மமும் பண்பு மோங்கிப்
பவமெனுங் களைகள் நீங்கிப்
பக்குவ நிலைகள் மல்கிச்
சிவ மணங்கமழச்சீருஞ்
செல்வமும் திகழ்ந்த வாங்கே.

பத்தியிற் றோய்ந்து ஞானப்
பரமனார் கருணை மேவிச்
சித்துகள் மனத்தாற் செய்த
சிகண்டியா மாண்டியாரோர்
முத்தியிற்கலந் தேயிங்கு
முறையுற வடங்கலாலே
இத்தலமுயர் சித்தாண்டி
யெனும் பெயர் பெற்றதன்றே.

**சித்தாண்டிப்பதிக்கு**
**வேளாளர் வந்து குடியேறிய சிறப்பு**

பரதமா கண்டந் தன்னிற்
பரந்தபற்றலங்கடோறும்
மரபுறு வேளாண் மாந்தர்
வகை தெரிந் தொருங்குகூடி
வரவு கொள்வங்கமேறி
மட்டுமா நகரின் தென்பால்
திரையுறு கரையடைந்து
திகழ் கோரக் களப்புவந்தார்.

வந்தவர் காரைதீவில்
வளமுடன் வாழுங்காலை
* ஐந்து நற்பதியிலொன்றாய்
அமைந்த சித்தாண்டியூரில்
கந்தவேள் பெருமான் வைகிக்
கதியருள் தலத்தைநாடிச்
சிந்தனை நிறைவாராகிச்
சேர்ந்தினி திங்கடைந்தார்.

---

* ஐந்து நற்பதிகளாவன; வெருகல், மண்டூர்பிட்டி, சித்தாண்டி, மண்டூர், திருக்கோவில்,

## தொழில்வளச் சிறப்பு

வயலினை உழுது தொட்டு
வரம் பெலா முயரக்கட்டி
அயர்வறத் தொழில்களாற்றி
அதர்மங்கள் யாவும் நீக்கி
அயலவர்க்குதவி வாழ்ந்தே
யறம்பல பெருக்கியாண்டும்
உயரிய பண்பினோடே
யுலகெலாம்புகழ வாழ்ந்தார்.

கல்வியின் பெருமையுன்னிக்
கசடறக் கற்றுணர்ந்து
செல்வமு மோங்கவென்றும்
செயலினு லொன்றுபட்டுச்
சொல்வளம் பெருக நின்று
தூநெறியிறுகப் பற்றி
நல் வளம் பெருகயாண்டும்
நற்பெரும் பணிகள் செய்தார்.

## வேளாளர் முனிவர் குடிசையைப் புதுக்குதல்

இப்பெரும் பதியின் கண்ணே
இலங்கி நின்றருளை நல்கும்
ஒப்பரு முனி சமாதி
உவப்புடன் வலமாய் வந்து
எப்பிறப் பினிலோ முன்யாம்
இயற்றிய தவத்தின் பேருய்
இப்பிறப் பினிலிவ் வேலை
இரு விழிகுளிரக் கண்டோம்

கண்ணுறக் கண்டவன்னுர்
கருதிடு மெண்ணம் வாழப்
பண்ணி முன்னிருந்த கோவில்
பற்றறவகற்றிப் பின்னர்
மண்ணெடு களியுஞ் சேர்த்து
மரமொடு சுவரெடுத்து
வண்ணமார் கோட்டந்தன்னை
வரன் முறை கட்டினரே

நந்தமிழ் முருகனுக்கோர்
நற்பெருங் கோயிலாக்கி
வந்தனை வழிபாடாற்றி
வந்தவர்க் கமுது நல்கி
சொந்தமாம் முறையினோர்கள்
தூய வேல் பூசை பண்ணி
வெந்துயரகல வென்றும்
வேள்விகள் செய்தாரன்றே

முன்னர் வந்தடைந்தோ ராங்கு
முரு கற்காலயங்களகக்கப்
பின்னர் வந்தடைந் தோர் தாமும்
பெரும் பணி யாற்றி நட்பால்
நன்மணங் கொண்டு வாழ்ந்தே
நற்பெருங் குடிகளாகி
அன்னையின் வழியின் சார்பாய்
அமைந்திடு முறைமை கொண்டார்

## சித்தாண்டி மக்களின் குடிவரிசைப் பெயர் சிறப்பு

வரிசை வன்னியரும் நல்ல
வளந்திகழ் புதூ ஹூராரும்
உரிமை சேர் அத்தியாரும்
உயருகங் காணிமாரும்
பெருமை கொள் பட்டியாரும்
பேசு சந்தாப் பணிக்கர்
பரிவுடைப் பரமர் தேவப்
பணி கொணற் கோவிலாரும்

இப்பு விமாந்த ரெல்லா
மெழிலுடன் திகழவென்றே
செப்பிடு சலவையாளர்
சேர் மயிர் வினைஞர் தாமும்
இப்பதிக் கண்ணே வாழ்ந்திங்
கியற்றிடு சேவை யாவும்
அப்பெருங் குடியார் கூடி
அமைந்திடு முறையின் பாற்றே

**சித்தாண்டி முருகனுக்கு கற்கோயில் அமைக்க கல்லெடுக்கச் சென்ற காட்சி**

குன்றினைப் பிழந்தே கல்லால்
குமர நாயகனார் கோயில்
ஒன்றி நாமெடுப்போ மென்றே
யுளத்தினிற் கொண்டாராகி
அன்று நல்லோரை தன்னில்
அருவழி நடைமேற் கொண்டு
சென்ற வரயர் விடுேடே
சேர்ந் திடையிராத்துயின்றார்

துயிலினின் றெழுந்து மீண்டும்
தூயவேற் படையைப் போற்றி
உயிரினி திருத்தற் கென்றே
யுடம்பினுக் குணவு நல்கி
குயிலினம் குருவி கொக்குக்
குரங்கின மோடு காக்கை
மயிலினம் யாவும் வாழும்
வாழையின் சேனை கண்டார்

வாழையின் சேனை வாவி
கடந்து வண்ணாத்திப் பாலம்
தாழைகள் தருக்கள் சூழ்ந்து
தண்ணிழல் பரப்புங் கானம்
காலையரங்கு கூடிக்
காதமோ நடந்த தூரம்
வேலையில் நடந்தவற்றை
விநயமாய் விளம்பலுற்றும்

**கல்லெடுக்கச் சென்றவர்களை வழியிற் கண்டவர்கள் வினவுதல்**

கானிடைத் தருக்கள் தூவுங்
கனியொடு மலருந்தேனும்
வானிடை முட்டி நிற்கும்
வரைகளும் கவின் கொள் சோலை
மானின மோடு மேனை
மாக்களினொலியும் வாவி
மீனினம் யாவும் நோக்கி
வீரர்கள் விரைந்து சென்றார்

உண்டியு முறும்பசிக்கா
யுறையுளுங் கரத்திற்ருங்கித்
திண்டிறலுளத்தான் மிக்க
தீரர்கள் கடக்குங்காலை
அண்டியின் நெறி செல்வோர்கள்
அவர் திருவதனம் நோக்கி
மிண்டிநீர் செல்வதெங்கே
விரிவுற விளக்குமென்ருர்.

கொற்றவேல் வயங்கு சித்தூர்
குமரனுக் கெழில் சேர் கோட்டம்
பெற்றிட விழைந் தேயீண்டு
பெருமலைக் கல்லு மீட்க
ஒற்றடிப் பாதையூடே
உருக் கொடு செல்லு மெம்பால்
பற்ருெடு வினவு முங்கள்
பண்பு மிக்கினிதே யென்ருர்

அறங்களிற்றலையதாய
வாலய வினைமேற் கொண்ட
மறந்திகழ் வீரரே நும்
மரபினுக் கணி விளக்கும்
சிறந்த நல்லெண்ணம் வாழ்ந்தே
செய்கையில் வெற்றி கண்டு
பிறந்த பொன்னுட்டைச் சேர்வீர்
என்றவர் பிரிந்து சென்ருர்

**முருகனருளால் வெயில் குறைந்து வானம் மந்தாரமாகவிருந்த அற்புதம்**

எண்டிசை பரப்புந் தென்றல்
இரவியினொளி மந்தாரம்
வண்டுகள் நாதகீதம்
வள்ளர் கதிர் வழங்கு செந்நெல்
தண்டு சேர்மலரின் பொய்கை
தவத்தினிற் கனிந்தோர் சாலை
கண்டுளம் மகிழ்ந் தவீரர்
கழனி சூழ் பாதை போந்தார்

**கல்மலையையடைந்த வீரர்கள் கல்லுடைத்த காட்சி**

கல்லிடையடைந்தார் பல்லோர்
கரங்களாலுடைப்பார் பல்லோர்
உல்லினாற்றுளைப் பார் பல்லோர்
உளியினாற் குறைப்பார் பல்லோர்
வல்லினமென் பார் பல்லோர்
வளைகளைத் தொடுவார் பல்லோர்
நல்லியல் புடையோர் சேவை
நவிலுதற் கரிதேயம்மா

படியினையுடைப்பார் பல்லோர்
பற்றிட நிற்பார் பல்லோர்
இடியினாற் றகர்ப்பார் பல்லோர்
இறு கிடப்பிடிப்பார் பல்லோர்
பொடியினாற் பூழி யோங்கும்
புகையினால் மறைவார் பல்லோர்
துடிப்புடனங்கு நின்றே
தூண்களை யெடுத்தார் மாதோ

ஒய்யென வினைகள் யாவு
மோய்வற நிறைய நின்று
செய்திடு போழ்து தன்னிற்
றீரர்கள் சோர்வு நோக்கி
வெய்யவனுளமிரங்கி
வெம்மையைத் தணிக்கு மன்பின்
செய்கையால் மேகத் தூடே
சென்றுருக் கரந்து நின்றான்

**கல்லுடைத்த வீரர்களின் உடல் உளவலிமைச் சிறப்பு**

உளநிலைதளரா ராகி
உடல் வலி குறையாராகிப்
பிழைகளை நோக்காராகிப்
பெரும்பசி கருதாராகி,
மழை வெயில் பாரா ராகி
மாபெரு முயற்சி தன்னால்
வினைவினிற் கண்ணாராகி
விளங்கினார் பண்பு மிக்கார்

**வீரர்களின் உயரிய பண்புகள்**

தருமமுந்தானமுஞ் சரிநடு நிலைமையும்
கருவுறுமுயிர் களிற்கனிந்திடு நெஞ்சமும்
மருளுறு வஞ்சினர் மாண்புறு நோக்கமும்
முருகனின் சேவையும் முத்தியை நல்குமே.

**வேறு**

வீரவேளாள மக்கள்
　　வினையினால் மீட்டுக்கொண்ட
பாரமார் தூய கற்கள்
　　பாடமாய் வடிவு பெற்றுத்
தீரமார் தூணும்மிக்க
　　திண்மை கொள்வளையும் நன்கு
நேரிய படியும் நீண்ட
　　நிரைகளாய் மலையிற்கண்டார்.

**மலையடிவாரத்தில் வசித்த வேடுவமக்கள் கல்லேற்ற வண்டி கொடுத்து உதவுதல்**

மட்டற வோங்கிநிற்கும்
　　மரத்தினை யறுத்துச் சார்ந்த
பட்டையை நீக்கிப் பின்பு
　　பத முறவடித்தெடுத்த
கட்டையாற் செய்தவண்டி
　　கானவருத வவேற்று
நெட்டுருவான குன்றை
　　நேயர்களடைந்தாரம்மா.

வீரர்கள் தாங்கள் செதுக்கிய கற்றூண்கள் படிகள் முதலியவற்றை வண்டியிலேற்றிக்கொண்டு *நாவிதன் தீவு வாவிக்கரையையடைதலும் வேடுவர் வந்து தயிர்பால் முதலியவற்றைக் கொடுத்து உபசரித்தல்.

மலையுடைப் பெயர்த்த கல்லை
　　வண்டியிலேற்றி வந்தே
வலை படுகயல்கள் மல்கும்
　　வாவியின் கரையைச் சேர

* இவ்விடத்தை மயிலன் கரச்சை யென்றுங் கூறுவார்.

சிலையுடைக் கையர் வந்து
செப்புதிர் சேதியென்ன
நிலைமையைச் சொல்ல வன்ஞர்
நிறை தயிருணவாயீந்தார்

**பசி தீர்த்தவர்களை வீரர்கள் நோக்கி**
**ஆரென வினவியபோது**
**வேடுவர்கள் மனங்குழைந்து கூறல்**

மோரினையுண்ட வீரர்
முகமலர்ந்த வரைப் பார்த்தே
யாரெனக் கேட்ட போது
ஆங்கவர் மனங் குழைந்து
காரிருள் சூழுங்கானிற்
கரடிமான் புலிகள் கொன்று
போருறு வாழ்க்கை வாழும்
பொரு சிலைக்கை யரென்றூர்

**வீரர்கள் குலத்தின் சமத்துவ முரைத்தல்**

அன்புறு மனத்தராகில்
அரும்பசிகளை வராகில்
என்பையும் பிறர்க்கே ஈயும்
இனிய சற்குணத்தராகில்
மண்புவியதற்குள் வேறு
பாடிலை மக்கள் யாரும்
இன்புறக் கூடி வாழ்தல்
எந்தமிழ் மரபு காணீர்

உங்கள் பாலுயர் பண் பின்னுள்
ஒளிர் தலாலுணவு தந்தே
எங்கள் பாலுற் றவிந்த
இரும்பசிய தனைத் தீர்த்தே
பொங்கிடு நிறைவு தந்தீர்
பொலிக நுங்குலமு மென்று
அங்குள வீரர் கூறியவர்களை
வாழ்த்தி நின்றூர்

## வண்டியிலிருந்த கற்களை வாவிக்கரையிற் பறித்தல்

வேளெனும் சிறப்புக் கொண்ட
 வேளிர் தாங் கொணர்ந்த கல்லைத்
தோள்களிற் றூங்கிச் சென்றே
 துறைதனின் மருங்குசேர்க்கத்
தாளிடை முள்ளுங் கல்லுந்
 தாக்கிட நின்ற போது
வாளரி மேனியன்ன
 வழிந்தது குருதியாறு.

குருதிநீர் வழிந்தபோதுங்
 குன்றிடா வலியராகி
அருளுயர் மருந்தெமக்கிங்
 கண்ணலே யளிப்பாரென்னும்
ஒரு விருப்புடையராகி
 உயர் மலைக்கல்லை யெல்லாம்
கருதிடுமிடங்கடோறும்
 கடிதினிற் சேர்த்தாரம்மா.

## கற்களை ஏற்ற வள்ளங்கொண்டு வருதல்
### கலி விருத்தம்

நெற்றி வேர்வையும்
 நீணிலஞ் சிந்திடப்
பற்றி மீட்டிடும் பார்மலைத் தூண்களை
 உற்றவூ ரரு
கொல்லையிற் சேர்த்திடப்
 புத்தி கண்டன
மென்று புகன்றனர்.

வெள்ளத்தாற்றிடை
 மீட்டிட வெண்ணியே
வள்ளத் தோடங்கு
 வந்தவர் கொண்டு போய்
உள்ளத்தூறு
 முணர்ச்சிகள் பொங்கிடக்
கொள்ளையின்பங் கொண்
 டாற்றினர் கொள்கையோர்

**கற்களை ஏற்றிய வள்ளம் அசையாதது கண்டு வீரர்கள் மனந்தளர்ந்தபோது முருகன் முனிவர் வடிவாகவந்து அருள் புரிதல்.**

அறுசீர் கழி நெடிலடி
**ஆசிரிய விருத்தம்**

கற்களை வீரராற்றின்
கடுவிசைப் படகுதன்னில்
முற்படவடுக்கிப் பின்னர்
முயன்றதை முடுக்கித்தள்ள
அற்பமுமசையா நிற்ப
வாங்கவரழுது நின்றே
யிற்றையாம் செய்வதென்னே
வென்றவரிரங்கும் போது.

உச்சியிற் கற்றை சூடி
ஒரு கரங்கோலை யூன்றக்
கச்சையுமரையிற் கட்டிக்
கறைபடி சீரைசுற்றி
பிச்சை யேற்றுண்டுமாறாப்
பெரும் பசியுடையார் போல
மச்சமூர்ந்துலவு மாற்றின்
மருங்கிலோர் முனிவன் நின்றான்.

முனிதனைக் கண்ட வீரர்
முறையிடவவர் சிரித்தே
மனிதர்காள் நீவிராற்றும்
மாபெரு கருமம் யாவும்
இனிதுற முடிதல் வேண்டி
லீண்டு யாம் கூறுமாறு
துணிவுறச் செய்வீராயின்
துரிதமாய்க் கூடுமென்றார்.

காடெலாங் கடந்து நீவிர்
கற்களைக் கொண்டு வந்தே
யோடமதனிலேயேற்ற
யுறுபெரும் பாரந்தன்னால்
ஓடமதசையாதாக
உளந்தளர்திருப்பதாலிப்
பாடுறு கற்களெல்லாம்
பறித்திடும் கரையிலென்றார்.

வாவியில் வள்ளந்தன்னை
வலுவுறத் தள்ளிப் பின்னர்
தாவியிக்கறகள் யாவும்
தனித்தலி யேற்றிவைத்தே
நாவினால் நமச்சிவாயம்
நவின்று நீர் ஓட்டுமென்று
கூவியம் முனிவன் கூறக்
கூடின கருமமெல்லாம்

கூடிய போதிலாங்கே
குறுகிய முனியைக்காணார்
தேடினர் தெருக்களெல்லாம்
திகைத்தனர் கானந்தன்னில்
ஓடினரோய் விலாமல்
ஒருவர் பின்னொருவராக
நாடியுங் காணாராகி
நம்பியே யென்றுணர்ந்தார்.

### வீரர்கள் முருகப் பெருமானை வாழ்த்தி வணங்குதல்

அழுதனர் அண்ணல்பாதம்
அமர்ந்துள விடத்தைச் சூழ்ந்து
தொழுதனர் தொழுது நின்று
தோத்திரப்பாக்களாலே
வழுவற வோதிவாழ்த்தி
வாரி போற் கண்ணீர்மல்கக்
குழுமினராடிப்பாடிக்
குதித்தவரினைய சொல்வார்.

### எழுசீர்க்கழி நெடிலடில் ஆசிரிய விருத்தம்

முண்டகத்தில் விளங்குமயன்றேவரோடு
முத்தர்களும் சித்தர்களும் முறையே நிற்க
எண்டிசையுஞ்சூழ மட்டபாலர் தாமும்
எழுநதியு மெழுமுகிலுந் தோன்றிக்காண
அண்டர் பதியிந்திரனுஞ் சயந்தன் தேவர்
அவனியுறை சிவரெனாந்தன் பாற்காட்டிக்
கொண்டு பெருவடிவெடுத்த குமரனெம்முன்
கோலமுனியாய் வந்து மறைந்தானம்மா.

சூரியருஞ் சந்திரருமொளி தந்துய்க்க
சுந்தரவிண் மீன்களெங்குந் துலங்கிநிற்க
ஆரிடர்கள் ஐந்தெழுத்தைப் பன்னிநிற்க
அங்கதனு மக்கினியு மண்மி வாழ்த்த
பாரிடர்கள் குழாத்திஞெடு பரவிப் போற்றப்
பார்மலையுந் நவக்கோளுமானதெல்லாம்
ஓரிடத்தில் கொண்டவுருவான மூர்த்தி
ஒரு முனியாய் வந்திங்கு மறைந்தானம்மா


அறுசீர்

வானகந்தன்னில் நின்று
வையத்தை வலமாய் வந்து
கானக வள்ளி தன்னைக்
கடிமணம் புரிந்து தேனைப்
போனக மாகவுண்ட
புலவனே நம்மைக்காக்க
மானிடனாக வந்து
மாயமாய் மறைந்தானம்மா

மலைமகள் பாகம் வைத்தோன்
மண்புவியுயிர்கள் யாவும்
நிலைபெறும் பொருட்டுத்தாமே
நிறைந்தவேற் குமரனாகி
கலையினிலிதுவுமொன்றாய்க்
காட்டவே முனியாய்த் தோன்றிச்
சிலைகளை வள்ளமேற்றிச்
சீக்கிரம் மறைந்தானம்மா.

குருவினுக்காசானாகிக்
கூறுமந்திரம் போதித்தே
யருமறைப் பொருள்களெல்லாம்
அவனியில் விளங்கவென்றும்
திருவருள் புரியுங் கந்தன்
தேடியேயிங்கு வந்து
மருவு முத்தமிழாற் பேசி
மாயமாய் மறைந்தானம்மா.

கூரிலுயர் வேலினொடு நின்ற முகமொன்றே
கொடிய சூர்தானைகளை வென்றமுகமொன்றே
சீரிலுயர் தேவர்களை மீட்ட முகமொன்றே
செந்தமிழை யோதுமுனிகண்ட முகமொன்றே
பாரிலுயர் குன்றுதொறுமாடு முகமொன்றே
பாதம் பணிவோர்க்கருள் வழங்குமுகமொன்றே
ஊரிலுயர் சித்தாண்டிக் கோயிலருள் மேவி
உறைந்துவளர் ஆறுமுகமான பெருமாளே



சண்முகக் கடவுள்.

என்றிவர் கந்தவேளை
இருகரங்குவித்திறைஞ்சி
அன்று நாள் நாங்கள் செய்த
அருந்தவப் பயனினாலே
இன்றொரு முனிவேடத்தில்
இறைவனின் மேனி தன்னைக்
கண்டுளம் களிக்கப்பெற்றோம்
கையினிற் பலனைக் கண்டோம்.

அன்புறு மனத்தினார்தம்
அரும் பெரும் பணியாற்பாரில்
துன்பமிக் கடர்ந்த போதும்
தூய நல்லுணர்வாலென்றும்
இன்புற விலங்கு மேகன்
இணையடி பற்றி நிற்பின்
தன் பெருவினைகள் யாவும்
சார்புற முடியுமன்றே

**வெள்ளத்திலேற்றிய கற்களைக் கொண்டுவந்து**
**மறுகரையடைதலும்**
**ஊர்மக்கள் வந்து கற்பறித்தல்**

ஆற்றினில்மி தந்து நிற்கும்
அகன்பெருவெள்ளந் தன்னைச்
சேற்றினிற் சிக்குறமற்
சிவயமந்திரத்தை யோதிக்
காற்றினலுதவி யோடே
கரையினை யடைந்தகாலை
போற்றியோ போற்றியென்று
புளகிதமடைந்தே யார்த்தார்.

இன்னது கேள்வியுற்றே
இலங்கு சித்தாண்டி மக்கள்
அன்னவர் வந்து நின்ற
வரும்பெருந்துறையிற் சேர்ந்து
பொன்னிகர் மாலை சூட்டிப்
புது மலர் தூவி வாழ்த்தி
பின்னிடு கற்களெல்லாம்
மிக மகிழ்ந்திறக்கலுற்றார்.

பின்னரு மிடைவிடாது
பெருவலி படைத்தவீரர்
பன்னரு தினங்களாகப்
பகல்நிசி காலந் நோக்காத்
துன்னினர் மலைகள்மீது
தூண்களை நெறியாற் கொண்டு
தொன்னகர் கோயிலண்டைத்
துரிதமாய்க் கொண்டு சேர்த்தார்

**மலைகளிலிருந்து கொண்டுவரப்பட்ட கற்கள் கோவில் வீதியெங்கும் நிறைந்து கிடந்த காட்சி**

பல்வடி வமைந்த கற்கள்
பரப்புறுமலை போலீண்டிச்
செல்வழி மறைத்தேநின்று
சிறந்தவான் முட்டி யப்பால்
எல்லவன் கடக்கும் பாதை
இடையினை மறிக்க மாந்தர்
எல்லெலவருள்ளங் கொள்ளை
இறும்பூதாற் பொலிந்த தாங்கே

**வேளாளமக்கள் கோவிலமைத்தல்**

சேர்ந்தவிச் சிலைகளாலே
சீர்கொள் வேளாளமக்கள்
ஆர்ந்த நற்குடிவிளங்க
வவரவர் பங்குவேலை
தேர்ந்தினி தெடுத்து வேலர்
திருத்தலப் பணிகள் தன்னை
சார்ந்தவரியற்றவென்றே
சபையினைக் கூட்டினாரே.

திருப்படையாக்கவேலை
தீவிரங் கொள்ளுநாளில்
உருப்படச் சுவரின் மேலே
உறுபெருங் கற்களேற்ற
விருப்பொடு பலருந்தாங்கி
வேண்டிய முயற்சி செய்தும்
திருப்பமுங் காணாராகித்
திகைத்தவர் மொழிதலுற்றார்.

### மனந்தளர்ந்து இறைவனை வேண்டல்

தொல்லையில வுணராலே
சோர்வுறும மரர்தங்கள்
அல்லலைப் போக்கி யாண்ட
வருளுடைக் குமரா வீண்டு
**கல்வினை** யேற் றொறுத்து
கரையிலா வின்னல் தன்னைச்
சொல்லவும் நாவெழாமற்
றுயர்க் கடல் மூழ்கி நின்றோம்

பொங்கர வணிந்தோனீந்த
புதல்வனே வேண்டு மன்பர்
தங்களைக் காத்தாட் கொள்ளும்
தலைவனே போற்றி எங்கள்
மங்கிடும் மதி விளங்க
வந்தருள் செய்வாய் போற்றி
பொங்கு சித்தாண்டி மேவும்
புனிதனே போற்றி போற்றி

### முருகப் பெருமான் வேதியர் வடிவில் வந்து அருள் புரிதல்

என்றவர் கலங்கி நின்றே
யிறைவனை வேண்டுங் காலை
அன்று நான் பிட்டு வாணி
யம்மை யாரிடும்பை நீக்கக்
கொன்றை வார் சடை பிரானுங்
கூலியாய் வந்த வாறே
இன்றொரு மறை யோனாக
இலங்கு வேல வரும் வந்தார்

வந்திடு மறையோன் மார்பில்
வண்ணமா மணியிலங்கச்
சுந்தர வாடை தாங்கிச்
தூய வெண்ணீறு சாத்திச்
சந்தனக்களபச் சாந்து
சரீரமெங்கணு மேமின்னச்
சிந்தையில் நொந்தார் போலச்
சிவசிவா வென்ன நின்றார்

**வேதியர் பணித்தவாறு செய்ததால் கற்கள் சுவரின்மீது ஏறிய அற்புதம்**

வேறு

வந்த குருவாங்கவர்
மொழிந்த வுரை கொண்டு
சிந்தையுடனெல் வருஞ்
சேருமென வோத
அந்தணருரைத்த படி
ஆங்கவர்கள் செய்தே
எந்திர மெனச் சிலையு
யேறியது கண்டார்

வேறு

கண்டயாருங்களித்துப் பெருமிதங்
கொண்டு நின்று கை கொட்டி நன்கார்த்திட
வண்டை நின்றிடு மந்தணர்க் காண்கிலார்
பண்டை மாமலையிற் பறந்தானரோ

வேறு

ஆண்டகை முருகனேயா
மடைந்திடு மல்லல் கண்டே
ஈண்டு வந்தருள் வழங்கி
எம்மையு மகிழ் வித்தானல்
மீண்டுயாம் செய்வ தென்னே
மேன்மை சால் கோட்டமாக்கி
வேண்டுவோர்க் கருள் செய் தாழும்
வேலினையிருத்திக் காண் போம்

வண்டிரை யாழி சூழ்ந்த
வையக முறையு மாந்தர்
நன்றெனத் தெளிந்தே யாங்கு
நண்ணிடு பணிகள் யாவுங்
மண்டிடர் வந்த போதும்
மனத்தினில் வலியராகி
ஒன்றிய கருத்தோடாற்றின்
ஒல்லையில் முடியு மன்றே

## ஒவ்வோர் குடியாரும் செய்த கோயிற் றிருப்பணிச் சிறப்பு

ஆலய மமைப்பினுக்கோ
ரங்கமாய் விளங்கி யோங்கும்
மூல மண்டபமுந் தூபி
முறை யொடு புத்தூராரும்
கோலமாய் வயங்கி நிற்கும்
கொடி மரமண்ட பத்தைச்
சீல வன்னிமையார் கூடிச்
சிறப்புற வமைத்துள்ளாரே

விண்ணவர் புகழ்ந்து மெச்சும்
மென் மலர்ப் பொழிலு மாங்கே
நண்ணினர்க் கமுது நல்கும்
நன்மடப் பள்ளிதானும்
கண்ணிய வத்தியார் தம்
கடமையின் முடித்த தோடு
புண்ணிய கந்தப் போடிக்
குடியினர் புலங்களீந்தார்

கருணை கங்காணி யாருங்
கனதனப்பட்டி யாரும்
உரிமை சந்தாப் பணிக்க
ரெனப் பெறு முரவோர் தாமும்
பெருமை சால் கோயிலாரும்
பெட்புறு செட்டி யாரும்
கருணை கொண்டினி தாய்ச் செய்த
கருமங்கள் பல வாறன்றே

பாவலரினிது போற்றும்
பைந்தமிழ் மொழியை நித்தம்
காவல் செய்தருளுகின்ற
கந்த வேள் பெருமான் கோட்டம்
யாவரு மார்வத் தோடிங்
கணிபெற வினிதியற்றிப்
பூவுல கோர்களேத்தப்
புரிந்தனர் விணைகளெல்லாம்

முன்வினைப் பயனினாலோ
முருகனின் அருளினாலோ
தன் பெரு முயற்சி யாலோ
தரணி யோரு தவியாலோ
உன்னுறு கருமம் யாவும்
ஒல்லையில் முடித்தாராயின்
பன்னரும் பெரியாரென்று
பாரினர் போற்று வாரே

## உலகநாதக் குருக்கள் கெருடாவிலிருந்து குருக்கள்மடம் வந்துறைதல்

செந்தமிழு மாரிய முமியல் பாயோதுஞ்
சிவ சமயக் குருமரபின் நெறியைக் காத்து
வந்த திருக்கூட்ட மொன்று கெருடாவில்வில்
வாழையடி வாழை யெனவதிவ தாலே
அந்த வளப்பதியிருந்தே யுலக நாதர்
அருமறை களோதியுணர் சுற்றம் சார
கொந்த விழும் மலர்ப் பொய்கை சூழும் மட்டுக்
களப்பு சேர் குருக்கள் மடம் வந்துறைந்தார்

நிலவளனும் நீர்வளனும் நிறைந்து மல்கும்
நெறி பிறளாக் காரளர் மரபில் வந்த
புலவர் மணி பெரிய தம்பிப் பிள்ளையான
பெருமகனா ருறையு மூர்முந்தை ஞான்று
உலக குருநாதர் வந்து உவகை யோடே
யுயர் சைவத் திருப்பணியை வளர்த்ததாலத்
தலமதனைக் குருக்கள் மடநாமஞ் சூட்டித்
தமிழொலிக்க முன்னோர்கள் சான்றி வந்தார்

## சித்தாண்டிப்பதி மக்கள் தாங்களமைத்த கோயிலில் திருவிழா நடத்த உலகநாதக் குருக்களை அழைத்துவரச் செல்லல்

அடியார்கள் தொழுதிறைஞ்சியுய் வதற்காய்
ஆலயத்தையமைத்த சித்தாண்டி யூரார்
குடி முறையில் வந்தகுரு முறையை மாற்றிக்
குற்றமறச் சிவாகம நூலுணர் வல்லோர்கள்
கொடி யேற்றி விழாச் செய்தலுயர்ச்சியென்று
குருக்கள் மட முறையுலக நாதர் தம்மைக்
கடி தினில்யாம் கண்டு தரிசிப் போமென்று
கருதி யேநல் லோரை நிச்சயித்தார்

நிச்சயித்த சுபநன்னு ளமைந்த ஞான்று
நெடுவேலனெழுந்தருளுங் கோயில் நண்ணி
அச்சமுடன் பணிந்து வலமாக வந்தே
யடி யேங்கள் செல்கருமம்இனிதேயாக
இச்சமய மருள் புரிவாயிறையே யென்று
வினிதாக முறையிட்டவ்விடகமன்று
மெச்சுவளஞ்சேர் குருக்கள் மடத்தை நோக்கி
விரைந்தவர்கள் வந்தவரைத் தரிசித்தாரே.

பந்தமுடன் கண்டன்னுர் முகமலர்ந்து
பணிவாகக் கைகூப்பி வணங்கி நிற்க
அந்தணருமுபசரித்தே யாசி நல்கி
அன்பர்காள் வந்த செய்தி யுரைமினென்ன
எந்தையரே பக்குவங்கள் நிறையப் பெற்றுச்
இறைசிவத்தின் நெறி துலக்கும் முறைமைகேட்டுச்
சிந்தையராயுமையடைந்தோமெம்மூர் நண்ணிச்
சித்திரவேலவன் கோயில் சிறப்புச் செய்வீர்

**தம்மை அழைத்துவரச் சென்றவர்களுக்கு உலகநாதக்குருக்கல் கோயிற்பரிபாலகர் இலட்சணங்கூறல்.**

வேறு

பூவுல கோர்களேத்திப்
புகழ்ந்திடுகுமரன் கோயிற்
காவலர் கனிவினோடு
கழறலுங் கலையுணர்ந்த
பாவலருளமீக் கொண்டு
பணிமுறை விதிகளெல்லாம்
ஆவலோடினிமை சேர்த்தங்
கணிபெற விளக்கலுற்றுர்

வேறு

சத்தியத்தின் சின்னமெனும் சைவக்கோயில்
தாபனத்தின் மெய்க்காவலாயினோர்கள்
உத்தமங் கனிநிறைந்தவுளப் பாங்கராகி
உயர்வேதசிவாகம நூலுணரப்பெற்று
நித்தலுமெம்பெருமானுர் பதிக்கன் சென்று
நிறை விளக்கு முதலான சரியையோம்பி
நத்திவருமடியார்கள் நயந்து வாழ்த்த
நல்லொழுக்க சீலர்களாய்த் திகழல் வேண்டும்

இந்தவுயர்பண்புகளு மமைமவதன்றி
இறைவனுறை திருக்கோயில் நிதியைத்தங்கள்
சொந்தமெனக்கையாடா தினிது பேணித்
தூய திருத்தலம் விளங்கத் தொண்டிழுவே
நந்தவனம் நீர்ப்பொய்கை மடங்களாகும்
நல்லவருட் பணிகளுக்கே செலவு செய்யின்
நிந்தனைக்கேயிடமின்றி விளங்கி ஈற்றில்
நித்தியமாம்நிமல னருள் நிறைந்து வாழ்வார்.

மைந்தர்களும் நன்மார்க்க நெறியிற்செல்ல
மாசற்ற நீதிமதி புகட்டியோம்பும்
தந்தையரைப் போற் சைவக்குரவனுனோர்
க்ாத்திரத்தின் விதிகடன்னை விளக்கிக்கூற
புந்தியிலே நிறைந்தவர்கள் புளகமெய்தி
புரோகிதரின் தகமைகளைப் புகழ்ந்து போற்றி
வந்தகருமங் கவௌலாமினிதே நீங்கள்
வருமுறையை நிச்சயித்து வழுத்துகென்றுர்.

**உலக நாதக்குருக்கள் சித்தாண்டிப் பதி முருகன் கோயிலுக்கு விழாவெடுக்க வரச் சம்மதித்தல்**

வேறு

வேண்டுதல் செவிமடுத்த
வேதியரவரை நோக்கி
ஆண்டவன் பணிகளாற்ற
அன்பர்காள் விழைகின்றேனுல்
ஈண்டொரு குருக்கள் தம்மை
இனிதுற நியமித்தாங்கே
மீண்டொரு நல்லநாளில்
விரும்பி வந்தடைவோ மென்றுர்.

**சுபநாளில் குருக்களை அழைத்துவரல்**

ஐயருமுள மகிழ்ந்தே
அநுமதி வழங்க மீண்டு
துய்யதம்மூரை நண்ணிச்
சுருதி வேலவனை வாழ்த்தி
மெய்யுறக் குறித்த நாளும்
மேவினபோது கூடிக்
கையுறைப் பொருள்களோடும்
கடிதினில் மடத்தைச் சேர்ந்தார்.

குருவினைத் தரிசித்தன்னூர்
குடை கொடித்தாளமேளம்
வரிசைகள் யாவும் நல்கி
வழி முறை அழைத்துச் சென்று
விரிவுயர் மதிலுடுத்த
வேலவர் கோயில் சேர்ந்தங்
குரியநற் கடமை யாவும்
உவந்தவர் மறையோர்க்கீந்தார்.

## உலகநாதக்குருக்கள் கோயிலில் பூசைபுரிதற் சிறப்பு

படிமீது சீவரெலா மொருங்கே பேணும்
பக்குவங்கள் நிறைந்தவுளப் பண்பராகி
மடியின்றிக் கடமைகளை மனதிலெண்ணி
மறுசமயக் கொள்கைகளும் பரவிடாமல்
அடியவர்க்குச் சிவாகம நூல்நன்குணர்த்தி
அனுதினமுமாம் பசிக்கே யன்னமீந்து
பொடிநீறு கொண்டுபல வினைகள் தீர்த்து
பூசைதனைப் புரோகிதரும் புரிந்தாரன்றே.

பிறைதவழும் பெருமானூர் கருணை கூர்ந்து
பேதமறமொழிந்தருளிப் பெருமை சான்ற
மறைநான்கின் வழியொழுகிமனத்தாலொன்றி
மரபு நெறியியல் பானகருமமாற்றி
நிறைவான செங்கமலப்பூக் கொண்டன்பாய்
நியமமுடன் சிவகிரியை செய்தென்னாளும்
குறைகாணு மணங்கமழுங் கொள்கையோடு
குருநாதர் கோயிலிலே விளங்கினரே.

## சித்தாண்டி மக்கள் கோயிற் கருமஞ் செய்யுங் குருக்களுக்கும் மற்றும் ஊழியருக்கும் வயலும் நெல்லும் வழங்குதல்

வேறு

முருகவேளிலங்கு கோயில்
முதுமறை மரபில் நின்று
திருவருள் பெருக வோதித்
தினம் வழிபாடு செய்யுங்

குருவினுக்கன் பளிப்பாய்
குருக்கள் முன் மாரியென்னும்
ஒருவயல் கொடுத்து மாங்கே
ஊரவர் கருமஞ் செய்தார்.

பண்டைமுன் நாளிருந்து
பரம்பரை முறையிற் கோயிற்
றெண்டுகள் விளங்க வென்றும்
துலங்கிட நிலம் பெருக்கும்
ஒண்டொடியார்களாண்டுக்
கோரொரு குடும்பமாக
தண்டலாய் அவணம் பத்துச்
சாலிநெற் கொள்வராமே

விறகினை வழங்கு வோர்க்கும்
வெண்கலம் விளக்கு வோர்க்கும்
கறைபடுக பாடம் யாவும்
கவின் பெறத்துலக்கு வோர்க்கும்
நறையுறு மலர்கள் பூக்கும்
நற்பொழில் வளர்ப் போருக்கும்
முறை யொடு நெல்லு மீந்தே
முந்தை யோர் கடமை செய்தார்

## சித்தாண்டி சித்திரவேல் மகத்துவம்

மாயையிற் படிந்து நித்தம்
மற்றவர்க் கூறு செய்யும்
தீயவஞ்ச கரை வாட்டித்
தெளிந் திடுமதியும் நல்கித்
தூய நன் மனிதராக்கித்
தொல்லைகள் தீர்க்கும் சித்தூர்
நாயகன் கையிற்றுங்கும்
ஞானவேற் படை தானம்மா

வேறு

மிடியைப் பிடியில் விடுவித்திடுமே
மடியைச் சடிதின் மடி வித்திடுமே
படியிற்றுடியாய்ப் பதிதந்திடுமே
வடிவிற்றி கழும் வடிவேலதுவே

## சிந்தாண்டி மக்கள் சிறப்பான அலங்காரத் திருவிழா செய்தற்கு ஏதுவாக விருந்த அற்புதம்

வேறு

ஆங்கிலர் கண்டிதன்னை
  ஆக்கிரமித்த போது
தாங்கிய படையினேடு
  சார் மட்டுக்களப்பினேரும்
ஈங்கு வந்தடைதல் வேண்டு
  மென்ற வுத்தரவு தோன்ற
ஏங்கியிப்பதிக்கண் வாழ்ந்தோர்
  இறை பதியடைந்து சொல்வார்.

பொங்கர வணிந்தோன் பூத்த
  புதல்வனே வேண்டுமன்பர்
தங்களைக் காத்தாட் கொண்ட
  தலைவனே போற்றி மேலாந்
துங்கொளி மதிவிளங்கத்
  துய்யனே யருள்வாய் போற்றி
பொங்குசீர் சித்தூர் மேவும்
  புனிதனே போற்றி போற்றி.

மறைகளின் முடிவுக்கெட்டா
  மாயவன் மருகனிக்
குறைகளை நீக்கியாண்ட
  குரவனே திருத்தாள் போற்றி
மறநெறியதனுல் நாட்டு
  மன்னவன் கொடியவாணை
கறைகள் வந்தணுகிடாது
  காத்தருள் புரிவாய் போற்றி

திருத்தகு மதுரைமூதூர்ச்
  சிவன் பொருளளிக்குமாற்றல்
உருத்திர சன்மனைி
  உதித்தருள் செய்தகோவே
வருத்திடுமரசு சட்டம்
  வந்தெமை யுறுத்தாதாகில்
திருத்தலம் வளர்ந்திலங்கத்
  திருவிழாச்செய்து காண்போம்.

ஆன பேரர சராணை
யங்கு வந்துறுத்திடாது
போனபின் மகிழ்ச்சி யெய்திப்
புதிய தோர் திருப்பங் கண்டு
ஏனைய மூவூர் வாழும்
இயல் புடைப் போடி சேர்த்து
ஞான நாயகற்கு மேலாம்
நற்பெரு விழா வெடுத்தார்.

## சிதந்திரவேலாயுத சுவாமிக்கு எடுக்கும் திருவிழாச் சிறப்பு

ஆண்டியார் தவஞ் செய்த பதி விளங்கும்
ஆலயத்து விழா வெடுக்கும் வசந்த காலம்
பூண்டு வருமா வணியின் மாதவோரை
பொருந்து பிரதமை நாளிற் கொடியு மேற்றி
வேண்டு பல கிரியைகளும் விதியினோடு
வேள்விகளும் மூவைந்து நாட்களாற்ற
ஆண்டருளும் வேல வரும் வீதி வந்தே
யருள் பொழிந்து மலமகலத் தீர்த்தம் தோய்வார்.

## திருவிழா வீதிவலச் சிறப்பு

நன்னீரால பிஷேகித்து
நாற் பட்டுத்துயில் புனைந்து
பன்னீர் சந்தணம் தரித்து
பகரொளி மணிகள் பூண்டு
பன்னேரில்லாத சிந்துப்
பாக்களுமிசைத்து வாழ்த்த
தன்னேரில்லாத வீசன்
தனையனார் வீதி வந்தார்

சங்கு சேகண்டி மேளஞ்
சாமரை யிரட்டியேக
வெங்கணு மிறையின் நாமம்
வியம்பியெல் லோரும் வாழ்த்தக்
கொங்கை சேர் மங்கை யாரும்
குரவையிட்டாற் பரிக்க
துங்கமாமயின் மீதூர்ந்து
தூய நற்கு மரன் வந்தான்

வேத நூல் விளக்கிக் காக்கும்
வேதியர் மருங்கு சூழ்ந்து
பாததாமரைகள் போற்றிப்
பன்மலர் மாலை சூடி
நாதமு மடங்கப் பாடுந்
நல்லடியார்க்கு நாளும்
பேதக மறுத்தாட் கொண்ட
பெருமானார் வீதி வந்தார்

மோன சற்குருவாய் வந்து
முத்தியின் நெறியைக் காட்டும்
ஞானமுமுணர்வு மாகி
நள்பெருந்தவத்தால் மிக்க
வானவர் சிறையை மீட்க
மாயையிற் படிந்த சூரத்
தானவரழித்த வீரன்
சந்நிதி வீதி வந்தான்

குரோதங்கள் பேசுவோருங்
குந்தகம் விளைவிப் போரும்
விரோதிகளாயினோரும்
வேற் படை வலமாய் வந்து
அரோகரா வென்னப் போற்றில்
அன்புடனருள் செய் தேற்கும்
பரவுப காரி கந்தன்
பவனியில் வந்தானம்மா

வெஞ்சினவவுணர் தங்கள்
வெம்பகை மூண்ட போது
தஞ்சமென் றடியார் சூழ்ந்து
தாளிணைப் பிடித்த காலை
அஞ்சன் மினென்று வாழ்த்தி
அபய நற்கரம் விரித்த
கஞ்சமா மலரின் பாதக்
கந்தனும் வீதி வந்தான்

ஒள்ளொளி தீபச்சோதி
ஒண்சிரமிசையிற்றுங்க
வள்ளி தெய்வானை யோடு
வாரண முகனுஞ் சேர

எள்ளரும் வலிமை சான்ற
வெறில் பரித் தேர்மீ தூர்ந்து
வெள்ளி நேர்மணல் பரந்த
வீதியில் வேலன் வந்தான்

கங்கையை யணிந்தோன் மைந்தன்
கருணையை வேண்டி நாளும்
அங்கவர் கண்ணீர் தோய்ந்து
அங்கமும் புரண்டுருண்டு
செங்கையாற் றொழுது வாழ்த்தும்
சிவகுகா வோசை கேட்டு
பொங்கொளி வாழ்வு நல்கப்
புனிதனும் வீதி வந்தான்

சில மேயுருவாய் நின்று
திகழு சீரடியரெல்லாம்
ஆலயவாயில் நின்று
அலறிடும் போது பெற்ற
பாலகனழுதல் கண்டு
பரிவுடனணைக்குந் தாய் போல்
வேலனுமிரங்கிக் காக்க
வீதிமேல் வந்தானம்மா

## மயிற்கட்டுந் திருவிழா

ஆனனமாறு கொண்ட
வண்ணலா ரருவி பாயுங்
கானகச் சாரல் நண்ணிக்
கதுமெனத் துள்ளியோடும்
மானின மீன்றவள்ளி
மாதினைக் காதல் கொண்டு
போன பாவனையாயிங்கு
புரிகுவர் மயிற்கட்டம்மா

வள்ளியாரெழுந்து வைகும்
வனப்புறு கோயில் தன்னை
தெள்ளிய புனமே யென்னத்
திகழமா விலைகளாலும்
முள்ளிடு தாழை யோடும்
முதிர்சினை வாழைநட்டு
வெள்ளிய பூக்கள் தூக்கி
விளக்குகள் நிரைத்துக் காண்பர்.

தூயபொன் நகைகள் பூண்டு
துலங் கெழிற்றுயில் புனைந்து
ஆயிழையார்கள் கூடி
அம்மனைச் சூழ்ந்து வாழ்த்த
மாயிருள் கடியும் வேலன்
மஞ்ஞையிலூர்ந்து வள்ளி
நாயகி யருள் வழங்கும்
நற்பெருங் கோயில் சேர்வார்.

அங்கது காலை யன்பர்
அரோகரா வொலியிேனாடு
செங்கையாற் றொழுது கூப்பிச்
செந்தமிழ் மரபினோர்கள்
மங்கல மக்கட் கின்னே
மண முறையி யற்றலே போல்
இங்கு தம்பதிகட்கன்னோர்
இனிதுறக் கிரியை செய்வார்.

கடம்பினையணியும் மார்பன்
கன்னியாம் வள்ளி தன்னை
உடம்பட விழைத்தணைந்த
ஒரு பெரும் லீலையாயின்
தொடர்ந்திடு வினையினாலே
தொல்லுலகு யிர்களெல்லாம்
உடம்பினை யியல்பாய் நாடி
ஒன்றிடுந்தன்மை யொக்கும்

திருச்சிற்றம்பலம்

## சித்திரவேலாயுத சுவாமியின் தீர்த்தோற்சவச் சிறப்பு

மங்கை யோர் பாகனார்தம்
மாண்புறு சென்னி மல்கும்
கங்கையும் பெருக் கெடுத்துக்
காவிரி வழியாய் வந்து
பொங்குறு புணரிசேர்ந்து
புகழு சித்தாண்டி தேங்க
மங்கல விழாவினீற்றில்
மலங்களும் நலியத்தோய்வர்.

படரிருள் மாயை யென்னும்
பழிபடு மவுணர் தம்மைச்
சுடர் வடிவேலாம ஞானச்
சோதியால் நீக்கியாண்ட
அடல்கெழு குமரனார் தம்
அடியவரிடும்பை நீங்கத்
தடம் புனலாடுங் காட்சி
சாற்றரும் மாட்சியம்மா.

## கோயில் நித்திய பூசைச் சிறப்பு

கோலமார் குமரனார்க்குக்
குலவிடு தினத்தில் மூன்று
காலமும் கனிகள் நெய்தேன்
கண்டு சர்க்கரையும் நல்கிப்
பாலபிஷேகம் செய்து
பாகுசேர முதுகூட்டிச்
சாலநை வேத்தியங்கள்
சாத்திர விதியிற் செய்வர்.

## சூரன் போர்த்திருவிழாச் சிறப்பு

சிந்தையினிறைந்த வெண்ணம்
செயல்பட வடியரீங்கு
கந்தவேள் சஷ்டியென்று
காத்திடு விரத நாளில்
வந்திடு வீரரோடு
வன்மனச் சூரனங்கம்
சிந்திடப் பொருதுங் காட்சி
செப்பிடக்கரிய தன்றே.

## கோயில் வீதிச் சிறப்பு

வேறு

வண்ணமணிக் கோபுரமும்
வளர்ந்து தோன்றும்
வானவர்கள் திருவுருவம்
வரைந்து தோன்றும்

எண்ணமெலாந் தேவர்களை
நினைக்கத் தோன்றும்
இனிய தமிழ்க் கீதங்கள்
இசைக்கத் தோன்றும்
கண்ணிரண்டும் பெற்றபயன்
கருத்திற்றோன்றும்
காட்சியெலாம் மாட்சியொடு
கலந்து தோன்றும்
விண் மதியம் போலவொளி
விளங்கத் தோன்றும்
வினைதீர்க்கும் சித்தாண்டி
விரும்பினோர்க்கே.

அன்னமிடு சத்திரங்கள்
அணியாய்த் தோன்றும்
அடியார்கள் திருக்கூட்டம்
அணுகித் தோன்றும்
நன் மணமுங் கமழ்நந்த
வனமுந் தோன்றும்
நல்லறிவு பெறு நூல்கள்
நிலையந் தோன்றும்
சின்னமணிக் காவடியுஞ்
சீராய்த் தோன்றும்
சித்திவித்தி யாலயமும்
சிறந்து தோன்றும்
பொன்னுலகு போன்ற திருக்
கோலந் தோன்றும்
புகழ் பூத்த சித்தாண்டி
புகுந்துளார்க்கே.

நத்தினார்க்கு நல்லவொளிச்
சோதி தோன்றும்
நானென்ற வாணவமும்
நலிந்து தோன்றும்
சித்திதரு தங்கவடி
வேலுந் தோன்றும்
சிவநாமமைந் தெழுத்தைச்
செப்பத் தோன்றும்
புத்தியிலே புனிதபலன்
பொலிந்து தோன்றும்

புலனைந்தும் வித்திறையைப்
புகழத்தோன்றும்
பத்தியொடு பாயாலே
பண்ணத் தோன்றும்
பார் புகழுஞ் சித்தாண்டி
பதிகண்டார்க் கே.

உள்வீதி மண்டபமும்
உயர்ந்து தோன்றும்
ஓமென்னு மட்சரமும்
ஒளிர்ந்து தோன்றும்
விள்ளரிய விஞயகரின்
மூர்த்தி தோன்றும்
வினைதீர்க்கும் வயிரவர்தம்
வடிவந் தோன்றும்
தெள்ளு தமிழ்க் குரவர் திருக்
கோலந் தோன்றும்
தெளிவுடைய சண்டேசர்
கோயில் தோன்றும்
ஒள்ளியகோள் நவக்கிரக
விம்பந் தோன்றும்,
ஊரிலுயர் சித்தாண்டி
கண்டு ளார்க்கே.

## ஆடல் செய்யும் கொம்படித்தல் விழாச் சிறப்பு

வேறு

பெண்மையினுருவ மேவிப்
பெட்புறு தெய்வமான
கண்ணகி காதை கூறும்
கவினுறு கொம்பொடிப்பு
விண்ணில் நீரொருத்தருான்று
வீரர்க ளொருங்குகூடி
பண்ணிடு செயல்கள் யாவும்
பாரினர்க் கெடுத்துச் சொல்வாம்.

காட்டிடைத் தருக்கள் தன்னைக்
கண்டமாய்க் கூறு போட்டு
வாட்டியே வசப்படுத்தி
தென்வட சேரியாக்கி

வீட்டினில் விளங்கு தேங்காய்
    வேலவர் கோயில் முன்றில்
நாட்டினர் கூடி நின்று
    நயந்தினி தடிப்பர் தாமே.

மூவிருநாளுந் தேங்காய்
    முறையுற வடித்தே கொம்பை
பூவுயர் மாலைசாத்தி
    புனித நற்பூசை செய்து
காவிய மிசைத்துப்பாடிக்
    கவினுறு கொம்பிரண்டை
தேவியினருளோடூர் மாண்
    டேரினில் வைத்துக் காண்பார்.

ஏடகந்தன்னில் வாழ்த்தி
    ஏற்றிய கொம் போடூர்ந்து
நாடகம் நடித்துச் சேர்ந்து
    நல்லி சைப்பள்ளுப்பாடி
வீடக முன்றில் தோறும்
    நிறைகுடம் விளக்கு வைத்து
நாடெலாம் பிணிகள் நீங்க
    நன்மழை வேண்டி நிற்பார்.

வடசேரி தென்சேரி என்று
    வாரமாய்ப் பிரிந்து தத்தம்
இடங்களிற் கொம்பைக் கொண்டு
    இருத்தியே பூசைசெய்து
அடவி சூழ் கொடிநாராலே
    அன்றிரா கொம்பைச்சுற்றி
விடிந்ததும் கோயில் சேர்ந்து
    வீரர்கொம்பினைத் தேயார்ப்பார்.

சுண்ணமுங்களபச் சாந்துந்
    தூயவெண்நீறும் பூசி
வண்ணமார் மணிப்பூணுடை
    வகைவகையிலங்கக் கட்டிக்
கண்ணகல் வீதி தோறுங்
    காரிகையார்கள் கூடி
கண்ணகையம்மையாரின்
    கருணையைப் புகழ்ந்தே நிற்பார்.

இடைப்படு மக்களொன்றாய்
இப்பெருவிழாவிற் கூடி
வடத்திடைக் கொம்பைப்பூட்டி
வலிந்து சேர்த் திழுக்கும்போது
உடைபடுநாதங் கேட்கில்
ஒல்லையிலோடி நோக்கிப்
படை பொருதெடுத்த வெற்றிப்
பான்மை போல் மகிழ்ந்தேயார்ப்பார்.

கொற்றமதடைந்தார் கொம்பைக்
கோயிலை வலமாய் வந்து
மற்றய சேரியார்க்கு
வசைமொழி மகிழ்வால் கூறி
நற்றமிழ்க்கு ளிர்த்தி பாடி
நாயகி யருளினாலே
பெற்றிடு வெற்றி நோக்கிப்
பொங்கல் பங்கீடு செய்வார்.

வேறு

நிந்தனை புரிந்திடு நெறியிலான்களும்
இந்த நாள் தன்னிலே எவரு முண்டிடார்
வந்தனைச் செயல்களால் வான்புகழோங்கியே
அந்தணர் வீதிபோல் அவ்வூர் விளங்குமால்

வேறு

நாவிலுஞ் சத்தியாகி
நம்பினோர்க் கருளெஞ்ஞான்றும்
கோவிலுஞ் சத்தியாகிக்
கொம்பிலுஞ் சத்தியாகிப்
பூவிலுஞ் சத்தியாய்ப்பூ
மணத்திலுஞ் சத்தியாகி
ஆவியிற் சத்தியாகி
அமைந்திடுவா ளெம்மன்னை

## கோயிற் பரிபாலகர்களின் சிறப்பு

முன்நாளி னரசவையினாட்சியின் கீழ்
    முதன்மைபெறு வன்னிமை கண்ணப்பனும்
மின்னலெனப் பாய்பரியின் மீதே யூர்ந்து
    மிகப்பரந்த பேரிலாவெளி யில்வாழ்ந்து
தன்னிகரில்லாத் தலைவனாக எங்கும்
    தாங்கிநின்று மக்கள் நலம்புரந்து ஓம்பி
இன்னகரிலெழில் விளங்கும் வேலர் கோயில்
    இறை திறம்பாவினிது காத்திட்ட வேந்தர்.

கண்டாரும் வியக்கமிகக்கவின் பெற்றோங்கும்
    கருணையுருவானவுயர் சிகண்டி கோயில்
பண்டாரவன்னிமையார் சபையின் பின்னர்
    பண்போங்கு பத்தவன்னிமையுமானோர்
கொண்டாடித் துதித்தவர்கள் தூய்மையோடு
    குறைவின்றிச் செய்திட்ட சேவை மேன்மை
விண்டாரும் சொல்ல வருட்காட்சி நல்கும்
    வெளிவீதிக் கன்மதிலே சாட்சியாகும்.

பண்போங்குமம் பகவன்னி யனோடு
    பரிவாகவொன்றித்தே இனிதெல்லோர்க்கும்
நண்போங்கவுதவிய நல்மயிலிப்போடி
    நற்கலைகளுணர்த்தி நின்ற வழகிப்போடி
கண்போன்ற இற்பிறப்பின் மரபு போற்றி
    காத்தியற்றிவரும் பணியாலருளை நல்கும்
விண்ணுயர்ந்த சண்முக னார்விளங்குகோயில்
    மிளிர் சைவப் பிறப்பிடமாய் விளங்கிற்றன்றே.

மாரிமுத்து வன்னிமையார் தலைமையின்கீழ்
    வளரருணகிரியின் பின்னிளைய தம்பி
சீரினத்துப்பம்மரெனும் போடியாரும்
    சிறந்தபுலம் விளக்கிநின்ற பத்தப்போடி
ஊரினிசைபரப்பி வந்த மணியாம்ராசர்
    ஒன்றித் தகாலமதில் ஓங்கிக்காணும்
ஏரில் விளைசாலி சொரிசாலையோடு
    எழிலான வசந்தமண்டபமும் மற்றும்.

சண்முகனார் வன்னிமையும் முத்துப்பிள்ளை
சங்கரனார் காசுபதி ஆகியோர்கள்
எண்ணரிய முயற்சியினால் விண்ணைத்தாவும்
இராஜகோபுரமுமன்றி மணித்தூணோடு
கண்ணொளிரும் தூபிதொடு மண்டகத்தை
காண்புறுவார் வியப்படைய வழகாய்க்கட்டி
நண்ணினர்க்கே யருள்வழங்கும்
கணேசர் கோயில் நவக்கிரக வாலயமும்
எடுத்துக்கண்டார்

## சித்தாண்டிப்பதியைச் சிறப்பித்த பெரியார்கள்

### கைலாயப்போடியார்

* முன்பொருகால் மட்டுமா நகரைப்பஞ்சம்
மூடிநின்ற போதுமக்கள் பரிதவிக்க
அன்புமனத்தாதையர்போற் பிறீமனென்னும்
அரசாங்க அதிபருளம் ஆழநொந்து
தன்புரவியூர்ந்து மாகாணம் சுற்றித்
தாகமுடன் நெல்லுணவு சேர்க்கும்போது
நண்பர் திருக்கைலாயப் போடியாரும்
நயப்போடு நூறவணம் நெல்லுமீந்தார்.

### O குமாரசுவாமி உபாத்தியாயர்

பாதிரிமார் பள்ளிதனைக் காத்தகாலை
பயிற்சி பெற்ற வாசிரியனாயிருந்தும்
சாதிவழி முறையில் வருமாலயத்துச்
சபைதனிலே சேர்ந்தங்கு பணிகளாற்றி
ஆதிரை நாள் வளர்மதியிலன்னதானம்
ஆண்டுதோறும் மடத்தினிலே ஈந்து வாழ்ந்த
சோதி மயமான திருக்குமாரசுவாமிச்
சுந்தரனாரிவ்வூருக் கணியாம்மாலே.

---

* கைலாயப் போடியார் நூறு அவண நெல் அன்பளிப்புச் செய்த போது அரசாங்க அதிபர் மகிழ்ச்சிப் பெருக்கால் செட்டியார் என்னும் கௌரவப் பட்டம் வழங்கினர். அன்று முதல் கைலாசச் செட்டியார் என அழைக்கப்பட்டார் எனக் கூறுவர்.

O 1944ம் ஆண்டு சித்தாண்டியூர் வெள்ளப்பிரவாகத்தில் ஆழ்ந்த போது மக்கள் கதியின்றித் தவித்தனர். அவ்வேளை இவர் கரை சேர்க்கும் பணியிலீடுபட்டு மக்களுயிரைக் காப்பாற்றினார். அதனால் குளிர்சுரம் ஏற்பட்டு உடல் வருந்தி ஒருவாரத்திற்குள் உயிர்நீத்தார் என்பர்.

### வேலாயுதம்பிள்ளை விதானையார்

சாத்திரமோடிதிகாசம் நிறையக்கற்று
சங்கரனார் பூசைநிதம் செய்தேயுண்டு
கோத்திரமுங் குலங்களுமோ நோக்கிடாது
குணப்பொலிவால் மக்கள் நலம் பேணிக்காத்து
பாத்திரங்கள் ஏற்றுவருமடி யார்தங்கள்
பாரியெனப் பல மண்டபம் வழங்கி வந்து
மூர்த்திதலந் தீர்த்தங்கள் முறையாய்க்கண்ட
முருகவேலாயுதனார் வாழ்ந்த நல்லூரார்.

### நம்பிமுத்துச் சுவாமியார்

அங்கு மிங்கும் மெங்கு மருட்சோதியான
ஆண்டவனை ஐம்புலனுமடக்கி வாழ்த்த
பொங்குகடல் சூழுலகமாந்தரெல்லாம்
பொற்கோயில் கட்டிடுவராதலாலே
திங்களிவேணியன்றாள் தினந்துதித்துத்
திருவான தம்பிமுத்தென்னுமண்ணல்
மங்கை தெய்வானையம்மன் கோட்டந்தன்னை
வரன்முறையாய்க் கட்டி மக்கட்குதவினாரே.

### நெற்காணி வழங்கிய சிறப்பு

வெள்ளம் போல விளைந்திடுகாணிகள்
கொள்ளக்குன்றாக் குருக்கள் முத்தருட்டுடன்
பள்ளமாவெளியோடு சிறுவெளி
உள்ளமாரவு வந்து கொடுத்தனர்.

வேறு

புதுவெளியென்றே கூறும் புனல்செறிவாய்க்கால் பங்கு
பொதுவினைக்காட்டிப் பொங்கும் சந்தண மடுவாம்பூமி
கதிர்மணி குலுங்கி ஓங்கும் கரையாக்கையடியாம் காணி
முதிச சின்னனென் சேர்ந்த முக்கிய களனியாகும்.

### வாழ்த்து

வன்பகைச் செயல்கள் மாய்ந்து
மறநெறி யாவுந்தேய்ந்து
மன்பதையினத்தினோடு
மன்னுயிரனைத்துஞ் சேர்ந்து

அன்பெனுங் கருணைசார்ந்து
அறவழி நிலவியாண்டும்
இன்பமுங் குலவியோங்கி
இருநிலம் பொலிந்து வாழ்க.

ஓதியநெறியு மோங்கி
உலகெலாம் பரந்து வாழ்க
நீதியிற் றொழில் களாற்றி
நிதிகளும் சிறந்து வாழ்க
சீதமும் மாரிபெய்து
செந்நெலும் மலிந்தேயிங்கு
ஆதியிற் சித்தில் நின்ற
ஆண்டிசித்தாண்டி வாழ்க.

சத்திவேல் கருணை வாழ்க
சண்முகப் பெருமான் கோயில்
நத்திடு மடியார் வாழ்க
நான்மறைக்குரவர் வாழ்க
சுத்தசன் மார்க்கம் வாழ்க
தூயமுத்தமிழும் வாழ்க
சித்தியூர் தலபுராணச்
சீர்பரந்தினிது வாழ்க.

பாலுண்டு பசி தீர்க்க: வேலுண்டு வினை தீர்க்க

திருச்சிற்றம்பலம்

சித்தாண்டி முருகன்மீது முறையீட்டுப்பத்து

மனிதனென்றோருரு விளங்கிடச்செய்து
மந்தியின் தன்மையைப் போலென்
மனமது பலவிடஞ்சென்றலைவுற்றே
மாண்புக ளின்னதென்றுணரா
நனியிருள்சூழ்ந்து நயவஞ்சனென்று
நல்லவர் சொல்லிடவைத்த
கனியமுதூட்டி மகிழுசித்தாண்டிக்
கந்தனே விண்டெனக்கோதே.

படிமிசை படர்ந்த பாசங்களென்னைப்
பற்றிட முருகனே யுனது
அடிமலர் பரவிப் போற்றிடவுள்ளம்
அமைதியில்லாத பான்மையினால்

மிடிபிணிதுயரால் விளைந்திடுங் கொடிய
வெவ்வினை நீக்கியாண்டருளி
விடிவுநாள் தன்னை விரைவுடனருளி
விளங்குவாயாண்டியூரரசே.

உன்னருள் மேவியானுன்றாள் வணங்க
உணர்ச்சியோ தந்திடாயிலேயேல்
இன்னுமாரிடம் போய் தெய்வமென்றேநி
இன்னலைச் சொல்லியாறிடுவேன்
செந்நெலும் வயலும் சிறந்த சித்தாண்டித்
திருப்பதியுறைந்தருள் புரியும்
மன்னனேயுன்னைச் சிக்கெனப்பிடித்தேன்
மாண்புறவருள்வதுன் கடனே.

உயர்ந்திடுமார்க்க மெதுவுமேயிலதாய்
உலகிலே சாபிணம் போல்
அயர்ந்துற வாழ்ந்து அழுந்துதல் முறையோ
அற்றை நாள் சிலயினையாரும்
வியந்துறப்பற்றி மேலிடம் வைத்து
விளங்கு சித்தாண்டியூரரசே
நயந்துனைப் பரவி நல்வளங்காண
நாயினேன் விழைகிறேனருள்வாய்

தலைநிறையின்னற் சுமைகளையேற்றித்
தாங்கிடாவகையினல் மனமுந்
நிலைதடுமாறிப் பொய்யெனும் யாக்கை
நித்தியமென்றெணக் கருதி
மலையினை நிகர்த்த பிழைபலமண்டி
மாயைகள் சூழ்ந்திட வாழ்தல்
கலைவளர் சித்தூர் வள்ளலேயுன்றன்
கருணை யோவென்றெனக்கோதே.

குற்றமோ மனதிற் படிந்திடும் போதென்
குறைகளை யுணர்ந்திடாவகையில்
மற்றவர் மாட்டும் மாசுகள் சுமத்தி
வாயினுலிழிந்துரை வழங்கிப்
பற்றலைக்கிப் பாவியேன்றன்னைப்
பாரினில் வருத்துதல் முறையோ
முற்றறிவினனே விளங்கிடுஞ் சித்தூர்
முதல்வனே மதியெமக்கருளே.

என்புதோல்போர்த்த சீவரிலொன்றாய்
என்னையும் புரந்திடாயிலையேல்
பின்புயாரிடத்துப் போய் முறையிட்டுப்
பிறவியின் தொல்லையைத் தீர்ப்பேன்
மன்புவி போற்று வயங்கு சித்தாண்டி
வான்பதியுறைந் தருளரசே
அன்புளங் கொண்டு இன்னலைப் போக்கி
ஆதரித்தாள் வதுன்கடனே.

பெற்றிடுபிள்ளை யழுதிடும் போது
பிரிந்திடுமன்னையார் வந்து
பற்றியேயணைத்துப் பாணினைந்தூட்டிப்
பரிவுடன் மழலைகேட்பதுபோல்
பற்றுதலோடு நத்திடுமடியேன்
பாழ்வினை தீர்த்திட நினைந்து
வெற்றிவேலுடனே என்முனந்தோன்றி
விள்ளுவா யாண்டியூரரசே.

உய்துயானுலகில் வாழ்வினைப் பெறவே
உடல்வளங் குன்றிடும் போதுஞ்
செய்திடுமுயற்சி செம்மை காணுது
சிந்தையே கவலுதல் முறையோ
கையில்வேலதனல் கயமைப் போக்கிக்
கருணையைச் சுரந்தருள் நல்கும்
ஐயனேசித்து ஆண்டியூரடைந்தேன்
ஆதரித்தாள்வதுன் கடனே.

அருணகிரியாரினருந் திருப்புகழை
அற்றைநாட் கேட்டகமலர்ந்த
கருணையின் வடிவே கதறியான்மொழியுங்
கவிதைகட் காயினுமிரங்கித்
தருணமே நோக்காத் தயவுகூர்ந்தெனக்கு
தரணியிலுயர் நெறிகாட்டித்
திருவுறுஞ்சேவை செய்து வாழ்ந்தீற்றில்
சேவடி சேர்ப்பதுங்கடனே.

**திருச்சிற்றம்பலம்**

---

## ஆக்கியோன்
## அறிமுக ஆசி உரை

***இவர் யார் தெரியுமா?***


*எடுப்பான தோற்றம், நடுத்தர உயரம், திருநீற்றின் வெண்மை ஒளி விளங்கும் திரிபுண்டரம் தரித்த நெற்றி, கண்டோரை வசீகரிக்கும் அன்பான பார்வை, புன்முறுவல் பூத்த முகம், மிடுக்கான பேச்சு, செந்தமிழ் சிந்தும் திரு நா, நிமிர்ந்த நடை, நேர்மையான போக்கு, சித்தாண்டிச் சித்திரவேலாயுதன் அடி மறவாச் சிந்தை இத்தனையும் ஒருங்கேயமையப் பெற்ற செம்மல், கூலவாணிகன், திருநிறைச் செல்வர் திருவாளர் ந. அழகேச முதலியார் அவர்கள். இவர் சித்தாண்டி புராணம் பாடிய ஆசிரியர்.*

*ஈழமணித் திருநாட்டின் கீழ்பால் மீன்பாடும் தேன் நாடாம் மட்டுக்களப்பின் தென்பால் நான்கு மைல் தொலைவில் அமைந்தது ஆரையம்பதி. அக் கிராமத்தைத் தமது பிறப்பிடமாகக் கொண்டவரும், சன்மார்க்க நன்நெறியில் நின்று சிவநெறிச் செல்வராய் சைவம் காத்து வந்த பெருங்குடியில் வந்தவர் திரு. நல்லதம்பி. அவர் தம் மகனார். அழகேசமுதலியார் இவருடைய பரம்பரையினர். இயற்கைப் புலமை வாய்ந்தவர்கள். வாழையடி வாழையாய் வந்த புலமைச் செல்வம் சித்தாண்டிப் புராணத்தை நமக்குத் தந்துளது. இவர் கந்தசஷ்டி காலத்தில் புராணம் படித்தும் பயன் சொல்லியும் விரதம் அநுட்டித்தும் வந்தவர். கந்தன் கருணை கருத்தைத் தூண்ட காரைநகர் புராணத்தைக் கண்டார். நாம் ஏன் சித்தாண்டி புராணம் பாடமுடியாது! பாடுவோம் என்ற முடிவுக்கு வந்தார். நண்பர்களிடம் தமது கருத்தை வெளியிட்டார். அதற்கு ஊக்கமும் ஆக்கமுங் கிடைத்தது. சித்தாண்டி புராணம் மலர்ந்தது. சிந்தைக்கினிய செவிக்கினிய செஞ்சொற்றமிழால் சித்தாண்டிச் சித்தன் சித்திரவேலாயுதன் ஆறுமுகன் பண்ணவன் வரலாற்றை அவனருள் கொண்டு பாடிப் போற்றியுள்ளார். அன்னார் திருவாய் மலர்ந்த ''சித்தாண்டித்தலப் புராணம்'' பல்லாண்டு பல்லாண்டாக நிலைபெற்று வாழ்க. புலவர் முருகப் பெருமான் அருளால் எல்லா நலனும் பெற்று நீடு வாழ்க. செந்தமிழ் வாழ்க. சிவநெறி வளர்க.*

*சைவப் புலவர் - பண்டிதர்*
***த. கிருஷ்ணபிள்ளை***

*கல்லடி உப்போடை,*
*மட்டக்களப்பு.*
*18-10-73.*

# ஆக்கியோன்



திரு. ந. அளகேசமுதலியார்

# அறிமுகவுரை

இவர் சித்தாண்டிகுடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பொதுப்பணியே தம் வாழ்வின் அணியெனக் கருதி வாழ்பவர். அதனால் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், கிராம முன்னேற்றச் சங்கம், சனசமூக நிலையம் முதலிய ஊர்ப் பொதுச்சபைகளின் தலைவராயிருந்து பலவருடங்களாகப் பணிபுரிந்தவர். அன்றியும் கோயிற் பரிபாலன சபையிலும் ஈடுபட்டுப் பணிபுரிபவர். மேடைகளில் உணர்ச்சியோடு பேசும் ஆற்றல் படைத்தவர். இவர் ஆயுள்வேத வைத்தியம், சர்ப்ப வைத்தியம், ரண வைத்தியம் ஆகிய வைத்தியக் கலைகளிலும் சிறந்து விளங்குவதோடு கமத்தொழிலை விருத்தியடையச் செய்வதிலும் சிரத்தை கொண்டவர். இத்தகைமைகளையுடைய அன்பர் சித்தாண்டித் திருத்தல புராணத்தை அச்சிட்டுதவ முன் வந்தமைக்கு சித்திரவேற் பெருமான் கருணை கூர்ந்து எல்லாவளனுமினிது அருளுமாறு மனமார வாழ்த்துகின்றேன்.

ச. சண்முக வன்னிமை

சித்திரவேலாயுத சுவாமி கோயில்'
தேவஸ்தான சபை.
சித்தாண்டி.
15-10-73.

# பதிப்பாளர்



செ. கிருஷ்ணபிள்ளை

(வைத்தியர்)

இந்நூலாசிரியர் எழுதிய வேறு நூல்கள்:-

- தமிழ்த்தாய்க் காவியம்
- கந்த விரத அம்மானை
- திருநீலகண்ட விநாயகர் அகவல்

சித்தாண்டித் திருத்தலபுராணம் கிடைக்குமிடங்கள் :-

**செ. கிருஷ்ணபிள்ளை வைத்தியர்**

சித்தாண்டிகுடி,

முறக்கொட்டான்சேனை.

---

**திரு. ந. அளகேசமுதலியார்.**

"குமுதாஸ்"

ஆரையம்பதி,

கத்தான்குடி.

கத்தோலிக்க அச்சகம், மட்டக்களப்பு.